www.padippakam.com

விலை ரூ. 3-00 LICE... TN/MS (N) WPP-100

# ஈழ சுதந்திரன்
# ELASUTANTIRAN

திருவள்ளுவராண்டு
௨௦௨௮
ஆவணி-புரட்டாசி
செப்டம்பர்-1997
புத்தகம்: 10 இதழ்:10

- தென்னாப்பிரிக்கா ஆகிறது சிறீலங்கா!
- சிங்கள பௌத்த அரசின் நவீன இன ஒதுக்கல்!
- உயிர்காக்கத் தப்பி ஓடிவந்தாலும் நடுகடலில் தமிழர்கள் படுகொலை!

## சிங்களக் கடற்படையினரின்

# வெறியாட்டம்

தென்னாப்பிரிக்காவில் வெள்ளை நிறவெறி ஆட்சி கறுப்பர்களைப் பிரித்து ஒதுக்கி வைத்தது. வெள்ளையர்கள் எங்கும் போய் வரலாம்; கறுப்பர்கள் மட்டும் அவர்களுக்கென்று குறிப்பிட்ட பகுதிகளில்தான் நடமாட வேண்டும்; மீறினால் சுட்டுத் தள்ளப்படுவார்கள் என்ற கொடுங்கோன்மை ஆட்சி நடத்தியது.

இந்த நிறவெறியை, இன வெறியை எதிர்த்துப் போராடிய கறுப்பின மக்களை வன்முறையாளர்கள் என்று முத்திரை குத்தி காக்கை குருவிகளைப் போல சுட்டு வீழ்த்தியது.

அந்த நிலை இன்று தென்னாப்பிரிக்காவில் மாறி விட்டது. மண்டேலாவின் தலைமையில் கறுப்பின மக்களின் சனநாயக ஆட்சி ஏற்படுத்தப்பட்டு வெள்ளைநிற வெறியாட்சி நீக்கப்பட்டு விட்டது. ஆனால் அந்தக் காட்சி-இன வெறியாட்சி இன்றைக்கு இலங்கையில் அதைவிடக் கொடுமையாக நடைமுறைப் படுத்தப்படுகிறது.

### பிரித்தானிய அறிக்கை

தென்னாப்பிரிக்காவில் வெள்ளை நிறவெறியாட்சியை உலகமே கண்டித்தது. பல பன்னாட்டு அமைப்புகள் அதை ஒதுக்கி வைத்தன. இலங்கையிலோ அது கண்டு கொள்ளப்படாமல்இருக்கிறது. அதனால் அந்தப் பாதகத்தை நடத்தும் சிங்கள இனவெறியரசு, அதற்குப் பலியாகும் மக்கள் மீது பயங்கரவாத முத்திரை குத்தித் தப்பித்துக் கொள்ளப் பார்க்கிறது. பிரித்தானிய அகதிகள் ஆணைக்குழு வெளியிட்டிருக்கும் அறிக்கையே இதற்குச் சான்றாகும்.

ஆம்; 'ஜயசிக்றூய்' என்ற பெயரில் தமிழ் ஈழத்தின் மீது சிறீலங்கா முப்படைகள் தொடுத்திருக்கும் யுத்தத்தால் தமிழ் மக்கள் சிதறி ஓடியபடி உள்ளார்கள். வன்னிப் பகுதியில் மட்டும் இப்படி 50 ஆயிரம் தமிழ் மக்கள் அகதிகளாகி அலையத் தொடங்கியுள்ளனர் என்று அந்த அறிக்கை கூறுகிறது. 20 ஆயிரம் சிங்களத் துருப்புகள் ஒன்று சேர்ந்து ஒரே நேரத்தில் படையெடுத்தால்-தாக்குதல் தொடுத்தால் அப்பாவி மக்கள் என்ன ஆவர்?

இலங்கை ஒரு நாடு என்பது உண்மை என்றால் யுத்தம் நடக்கிற வடபகுதியைச் சேர்ந்த மக்கள், யுத்தம் நடக்காத தென்பகுதிக்குப்போக அனுமதிக்கப்பட வேண்டும் அல்லவா?

### இதுவா ஒரே நாடு?

உதாரணத்திற்கு வேறு எங்கேயும் கூடப் போக வேண்டாம். கச்சத் தீவையொட்டிய கடற்பகுதியில் சிங்களக் கடற்படையும் விமானப் படையும் தமிழ்நாட்டு மீனவர்களைச் சுடுகின்றன என்றதும், அப்பகுதிவாழ் தமிழக மீனவர்கள் தமிழ்நாட்டின் வடபகுதிக்குத் தாராளமாக இடம் பெயர்ந்து செல்வதைப் பார்க்கிறோம். தமிழக மீனவர் சங்கம் இவ்விதம் தமிழ் நாட்டின் தென்பகுதியிலிருந்து வடபகுதிக்கு 60 ஆயிரம் மீனவர்கள் இடம்பெயர்ந்துள்ளதாக அறிக்கை விடுத்துள்ளது.

ஆனால், இலங்கையில் மட்டும் வடபகுதித் தமிழ் மக்களுக்குத் தென்பகுதிக்குச் செல்ல உரிமையில்லை. ஏன்? சிங்களர் பகுதியாம். அதனால் தமிழர்கள் அங்கு செல்வதற்குக் கட்டுப்பாடாம். ஆனால் சிங்களவர்கள் மட்டும் வடபகுதிக்கு வந்து செல்ல எந்த விதமான கட்டுப்பாடும் கிடையாது. அவர்கள் இலங்கைத் தீவின் எப்பகுதிக்கும் தாராளமாகப் போய் வரலாம். தமிழர்கள் நடமாட்டம் மட்டும் கட்டுப்படுத்தப் படுகிறது தென்னாப்பிரிக்காவில் நிலவிய நிறவெறி நடவடிக்கைதானே இது?

ஆமாம்; தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தால் யுத்தம் நடக்கவில்லையே அங்கு சென்று உயிரைக் காத்துக் கொள்ளலாம் என்று சிங்களப் பகுதிக்குச் செல்ல முடியாது. கடவுச் சீட்டுடன் 'விசா' வாங்கி அயல் நாட்டுக்குச் சென்று வருவதை விட அதிகமான கெடுபிடிகள்.

அதுமட்டுமல்ல, தமிழ்ப் பகுதிகளில் இடம் பெயர்ந்த தமிழ் மக்கள் அங்கு அரசு அமைத்திருக்கின்ற அகதி முகாம்களில்தான் தங்க வேண்டும். அங்கும் உயிருக்கு உத்தரவாதம் கிடையாது. ஏனெனில் ராணுவத்தினர் வந்து திடீர் திடீரென்று சோதனைக்கு எனச் சொல்லிக் கூட்டிச் செல்வார்கள். திரும்பி வருவது அதிர்ஷ்டம் இருந்தால்தான் உண்டு. இல்லையென்றால் இல்லை.

### கணக்கின்றிக் காணாமல் போனோர்

அப்படித் திரும்பி வராதவர்கள் பற்றி உற்றார் உறவினர் சம்பந்தப்பட்ட ராணுவ அதிகாரிகளிடம் சென்று கேட்டால், "நாங்கள் உடனே அனுப்பிவிட்டோம்; அவர்கள் திரும்ப வில்லையென்றால் என்ன ஆனார்கள் என்பது பற்றி எங்களுக்குத் தெரியாது. நாங்கள் பொறுப்பல்ல" என்று கைவிரித்து விடுவார்கள்.

எனவேதான் எப்படியாவது உயிரைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் தமிழ் மக்கள் தங்களிடம் எஞ்சியிருக்கும் பொருள்களை எல்லாம் விற்றுக் காசாக்கி படகோட்டிகளிடம் கொடுத்து இந்தியாவுக்கு அகதிகளாக வரத் துடிக்கின்றனர். அதற்காக காடுமேடெல்லாம் மூட்டை முடிச்சுகளுடன் நடந்து கடந்துதான் படகுத்துறைகளை அடைகிறார்கள். படகிலும் ஐந்து பேர் இருக்கிற இடத்தில் ஐம்பது பேர் ஏறி உயிரைப் பணயம் வைத்துத் தான் பயணம் மேற் கொள்கின்றனர்.

நிலத்தில் தான் ஷெல்லடியும் குண்டடியும் செய்து கொன்று குவிக்கிறார்கள் என்றால், சிங்களப் படைகள் கடலிலும் தமிழர்களைச் சும்மா விடுவதில்லை. சுட்டுப் பொசுக்குகின்றனர். கப்ப

(2-ம் பக்கம் பார்க்க)

## இதற்காகவா தங்கா! இறப்பைப் பரிசளித்தனர்?



திருகோணமலை பா. உ. தங்கத்துரை உயிருடன் இருந்தபோது பாராளுமன்றத்தில் முன் வைத்த கடைசிப் புகார் என்ன தெரியுமா? யாழ்குடா நாட்டில் சிங்கள ராணுவத்தால் காணாமல் அடிக்கப்பட்டவர்கள் பற்றிய பட்டியலாகும்.

ஆம்; இந்த 1997 மே மாதம் வரை 656 பேர் தமிழ் மக்கள் யாழ்ப்பாணத்தில் காணாமல் போய் உள்ளனர். அவர்கள் என்ன ஆனார்கள் என்று அவர் பாராளுமன்றத்தில் வினாத்தொடுத்தார்.

இதுபற்றி யாழ்ப்பாண காணாமல் போனோரின் பெற்றோர்கள் சங்கம் குடியரசுத் தலைவர் சந்திரிகா குமாரதுங்கவுக்கு மனு அனுப்பியதைப் பற்றிச் சுட்டிக்காட்டி, அந்த அமைப்பைச் சேர்ந்த 500 பேர் மே 12ம் திகதி யாழ் கச்சேரி முன்னால் ஆர்ப்பாட்டம் நடத்தினார்களே, அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்தது? என்று கேள்விக் கணை தொடுத்தார்.

அதன் மூலம் சந்திரிகா அரசாங்கம் தமிழ் மக்களுக்கு எதிராகச் செயல்படும் இனவெறிப் போக்கை உலகறிய அம்பலப்படுத்தினார்.

ஒரு வேளை இதற்காகத் தான் சாவையே அவருக்குப் பரிசாகத் தந்தனரோ? அதுவும் கல்விச்சாலை நிகழ்ச்சியில் அவர் கலந்து கொண்டபோது, கல்விச் சாலை அதிபரையும் அவரோடு சேர்த்துக் கொலை செய்தது, தமிழ்ப் பிள்ளைகள் கற்றால்விழித்துக் கொள்வார்கள் என்று அதையும் தடை செய்யத்தானோ?

ஈழத் தேசிய இனத்தின் உரிமைக்குரல்

படிப்பகம்

www.padippakam.com

''திருத்தப் படு... ...கருமம் தம்மை
வருத்தியும் மாண்புடையோர் செய்க-பெருக்க
வரவும் பெருங்கூற்றம் வன்கண் ஞமன்கீழ்த்
தரவறுத்து மீளாமை கண்டு''

—'அறநெறிச்சாரம்'

(சாவால் கவரப்படும் உயிர்கள் திரும்புவதில்லை. எனவே அச்சாவு தரும் கொலையைத் தடுத்து நிறுத்தவும், தவறைத் திருத்தவும் மன வருத்தம் தரும் அனுபவத்திற்கு ஆட்பட்டிருப்பினும் மாண்புடையவர்கள் செய்ய வேண்டும். ஏனெனில், அதுதான் அறச்செயலாகும்.)

# தெளிவு

## நம்பிக் கிடக்கும் தமிழ் மக்களை வெம்பி விழ விட வேண்டாம்!

அன்னை இந்தியா தனது சுதந்திரப் பொன் விழாவைப் பன்முகச் சிறப்போடு கொண்டாடும் இந்தப் பாங்கான 1997ஆம் ஆண்டில் ஈழத் தமிழ் மக்களின் சார்பில் நமது இதய வாழ்த்துக்களைக் கூறிக் கொள்வதில் பெருமையடைகிறோம்.

''பாருக்குள்ளே நல்ல நாடு
பாரத நாடு''

என்று மகாகவி பாரதியார் கூறியதற்கேற்ப, சீருக்கெல்லாம் சிகரமான அதன் மாண்பை, மகத்துவத்தை யாராலும் அளவிட முடியாது. அந்த வழி வந்த மக்கள் யாம் என்று இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் எல்லாம்-அவர்கள் இன்று இந்தியராக இருப்பினும், இலங்கையராக இருப்பினும், பாக்கிஸ்தானியராக இருப்பினும், பங்களாதேசிகளாக இருப்பினும் இரும்பூதெய்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்த வகையில் நமது அன்னை பாரதத்திற்கு பல்லாண்டு கூறிக் கொள்கிறோம்.

ஆனால், சுதந்திரப் பொன்விழாக்காணும் இந்த நாளில் இந்தியாவின் தலைமையமைச்சராக உள்ள மாண்புமிகு இந்தர்குமார் குஜ்ரால் அவர்கள், கடந்த 14-8-97 அன்று பொன் விழாவுக்கு முதல் நாள் இந்தியப் பாராளுமன்றத்தின் மாநிலங்களவையில் இலங்கை இனப் பிரச்சினை பற்றித் தெரிவித்த கருத்து தமது விடிவுக்கு இந்தியாவையே எதிர் பார்த்துக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஏமாற்றம் தருவதாகும்.

ஏனெனில், இந்தியாவின் பரிவின்றி இலங்கை இனப் பிரச்சினைக்கு உண்மையான தீர்வு ஒருபோதும் ஏற்பட முடியாது.

மேலும், 1948ஆம் ஆண்டு தொட்டு 1987ஆம் ஆண்டு வரை இலங்கையுடன் செய்து கொண்ட பல்வேறு ஒப்பந்தங்கள் மூலம் இந்தியா இப்பிரச்சினையில் தன்னையும் ஒரு கட்சியாக ஆக்கிக் கொண்டுள்ளது. இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத்தீர்வு காணாமல் அவற்றிலிருந்து இந்தியா தன்னை விலக்கிக் கொள்ள முடியாது.

ஆகவே, இலங்கை இனப் பிரச்சினைக்கு தமிழ்மக்கள் விரும்பும் ஒரு நல்ல தீர்வினைக் கொண்டு வருவதற்கு இந்தியா தொடர்ந்தும் தன் செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

இடையில் ஒரு சில குழுக்களால் ஏற்படுத்தப்பட்ட கசப்பான நிகழ்வுகளை மொத்தத் தமிழ் மக்கள் மீதும் போட்டு நழுவ நினைக்கக்கூடாது.

''பொல்லாத சேய் எனில்
தாய்தள்ளல் நீதமோ ?
புகலிடம் பிறிதுமுண்டோ?''

என்ற தாயுமானவர் வாக்கை அன்னை இந்தியா எண்ணிப் பார்க்க வேண்டும்.

இது போன்ற கசப்புணர்வுகள் இராஜீய உறவுகளில் எத்தனையோ நாடுகளுக்கிடையே எவ்வளவோ நடந்திருக்கின்றன. அதற்காக எந்த நாடும் விவகாரத்திலிருந்து விலகிக் கொண்டதாகச் சரித்திரமுமில்லை.

அப்படியிருக்க உலகத்தின் மூத்த நாடாகிய இந்தியா இலங்கையில் உள்ள தனது குருதித் தொடர்புடைய மக்களை இடையில் கைவிடுவது ஏற்புடையதாகாது.

தவிரவும், கச்சத்தீவு ஒப்பந்தத்தைக் கவுரவிக்காமல்-அதைச் சுற்றி மீன் பிடிக்க இந்திய மீனவர்களுக்குள்ள உரிமையை மதிக்காமல் சிறீலங்கா அரசு எப்படி அவர்களைக் கண்மூடித்தனமாகச் சுட்டுத் தள்ளுகிறதோ, அப்படியே 1987ல் இந்தியாவுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மதிக்காமல் ஈழத் தமிழ் மக்களையும் கொன்று குவித்து வருகிறது.

எனவே, இந்திய-இலங்கை ஒப்பந்த அடிப்படையிலேனும் இலங்கைத் தமிழ் மக்களின் உரிமைகளை நிலைநாட்ட, அவர்களை உள்நாட்டு யுத்தம் என்ற பெயரில் சிறீலங்கா அரசு இனக்கொலை புரிவதை நிறுத்த இந்தியா முன் வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தமிழர் பிரச்சினை என்பது முற்றிலும் சிறீலங்காவின் உள் விவகாரமுமல்ல. அதனால் அதில் தலையிட்டுக் கையைச் சுட்டுக் கொள்வது என்ற பேச்சுக்கே இடமில்லை. ஏனெனில் மன்னார் விரிகுடாவின் இருபுறமும் இருப்போர் தமிழ் மக்கள். தமிழகம் இந்தியாவின் ஒரு மாநிலமாக இருக்கும் நிலையில் ஈழத்தமிழ் மக்களை இந்தியா முற்றிலுமாகக் கைகழுவவும் முடியாது.

ஆதலால், இடையில் ஏற்பட்ட கசப்புணர்வுகளை மறந்து இலங்கைத் தமிழ்மக்களின் விடிவுக்கு உடனடியாக ஆவன செய்ய முன்வரவேண்டும் என்று, மாண்புமிகு பிரதமர் குஜ்ரால் அவர்களை வேண்டிக் கொள்கின்றோம்.

# கைவசம் இருந்த காசும் முடிந்துவிட்டது கப்பல் புறப்படுகிற அறிகுறியும் இல்லை

## வடபகுதி செல்வதற்காகத் திருமலை வந்த மக்கள் பிரலாபம்

திருகோணமலை காங்கேசன் துறைக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவை பல வாரக்கணக்காக நடைபெறாதது காரணமாக திருகோணமலையில் ஆயிரக் கணக்கான மக்கள் வடபகுதிக்கு செல்ல முடியாது தவித்து நிற்கின்றனர்.

கப்பல் இன்று போகும் நாளை புறப்படும் என்று அரச அதிகாரிகள் கூறினாலும் பயணிகள் கப்பல் சேவை நடைபெறுவதற்கான அறிகுறி எதுவும் காணப்படவில்லை.

கொழும்பிலிருந்தும் வவுனியாவிலிருந்தும் வந்த வடபகுதி மக்கள் பலரை சந்தித்து அவர்கள் படும் துயரங்களை கேட்டறிந்த பொழுது பலரும் கையில் காசுஇல்லாமலும் போதிய போஷிப்பு கிடைக்காமலும் அவதியுறுவதை அவதானிக்க முடிந்தது.

சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் சொந்தக்காரர்களாகி விட்ட அவர்களில் பலர் எதுவும் பேசமுடியாது வாய் மூடி மௌனிகளாகவும் மாறிவிட்டனர். துயரம் தோய்ந்த முகங்களுடன் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணம் கொய்யாத் தோட்டம் வாசியான திருமதி இமெல்டா நாகராஜா (53 வயது) என்பவர் தமது நிலை பற்றி கூறுவதாவது:

''மருத்துவ சிகிச்சை பெறுவதற்காக வடபகுதியிலிருந்து நான் வந்தேன். கொழும்பிற்குச் சென்று சிகிச்சை பெற்றுக் கொண்டு இங்கு வந்த போது கப்பல் சேவை இடை நிறுத்தப்பட்டதாக பிரதேச செயலகத்தினால் தெரிவிக்கப்பட்டது. என்றாலும்கூட எப்படியாவது கப்பல் சேவை நடைபெறும் தானே என்ற நம்பிக்கையுடன் தான் இருந்தேன். தினசரி பிரதேச செயலகத்திற்குச் செல்லும் போதெல்லாம் கப்பல் சேவை இன்று நடைபெறலாம். நாளை இடம் பெறலாம் என்ற நம்பிக்கையுடனேயே நாம் சென்றோம்.

இன்றோ எனது நம்பிக்கைகள் தவிடு பொடியாகி விட்டது. இனிமேல் கப்பல் சேவை இடம் பெறாதோ என்ற அளவிற்கு எங்களுக்கு அவநம்பிக்கை ஏற்பட்டு விட்டது.

# வெறியாட்டம்... (1-ம் பக்கத் தொடர்ச்சி)

லோடு கடலில் மூழ்கிச் சாகச் செய்கின்றனர்.

இப்படி கடந்த மே 28ம் திகதி யாழ்ப்பாணத்திலிருந்து கப்பலில் தமிழ் நாட்டுக்கு வரப்புறப்பட்ட 19 தமிழ்அகதிகளை கப்பலோடு கடலில் ஆழ்த்தி விட்டது சிங்களப் கடற்படை கடந்த அக்டோபரில் 160க்கும் மேற்பட்ட தமிழ் அகதிகள் இவ்விதம் பாக்கு நீரிணையில் சாகடிக்கப்பட்டுள்ளனர். இதை பிரித்தானிய அகதிஆணைக்கு குழுவின் அறிக்கை தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது.

### படகோட்டிகளின் வஞ்சகம்

இது இப்படியென்றால், மனிதாபிமான மற்ற படகோட்டிகளே இந்தியாவுக்குப் புறப்படும் தமிழ் அகதிகளை ஏமாற்றி வஞ்சிப்பதும் நடக்கத்தான் செய்கிறது.

அண்மையில் தலைக்கு ரூ. 13,000 செலுத்தி இந்தியாவுக்குப் படகேறிய 46 அகதி மக்களை 5 மணிநேரம் கடலில் அலைக் கழிந்து, இருட்டோடு இருட்டாக இராமேஸ்வரம் என்று தலை மன்னார் அருகில் உள்ள குருசுப்பாடுவில் இறக்கி விட்டு, ''அதோ வெளிச்சம் தெரிகிறதே அது தான் ராமேஸ்வரம் டவுன்'' என்று கூறி நடக்கச் சொல்லியிருக்கின்றனர் படகோட்டிகள் அத்துடன் அவர்கள் இந்தியாவுக்கு வந்து விட்டதாக அவர்களிடம் எழுதி வேறு வாங்கிக் கொண்டு சென்றிருக்கின்றனர். நல்ல வேளை அங்கு உறங்கிக் கொண்டிருந்த மீனவர் ஒருவர் அவர்களைத் தடுத்து, உண்மையை விளக்கி, ''வெளிச்சம் தெரிகிற இடம் ராமேஸ்வரமல்ல; கடற்படை முகாம் இந்த நேரத்தில் நீங்கள் அங்கு போனால் சுட்டுத் தள்ளிவிடுவார்கள்'' என்று கூறி காலையில் அவர்களை கடற்படையினரிடம் சரணடையுமாறு செய்திருக்கிறார். இல்லையென்றால் அவர்கள் கதி அதோ கதி தான்!

இப்படியும் நடக்கிறது என்பதையும் தெரிந்து தான் ஈழத் தமிழ் மக்கள் இந்தியாவுக்கு வருகிறார்கள். எதற்காக? உயிரையாவது பாதுகாத்துக் கொள்ளலாமே என்ற ஒரே நம்பிக்கையினாலே தான்.

### உலக மனச்சான்று விழிக்கட்டும்

அதையும் இடைமறிந்து சிங்களக் கடற்படை சுட்டுக் கடலில் ஆழ்த்துகிறதென்றால் தமிழர்களை வாழவிடக் கூடாது என்ற வஞ்சக எண்ணத்தைத் தவிர, இதற்கு வேறு என்ன காரணமிருக்க முடியும்?

இவ்விதம் சிங்களக் கடற்படை இலங்கையிலிருந்து ஓடி வரும் தமிழர்களை மட்டுமா கொல்கிறது? இல்லை; தமிழக மீனவர்களையுமல்லவா சகட்டு மேனிக்குக் கொன்று குவிக்கிறது?

அப்படியென்றால், தென்னாப்பிரிக்காவிலிருந்த நிறவெறிக்கும் சிறீலங்காவின் இனவெறிக்கும் என்ன வேற்றுமை?

அதைத் தட்டிக் கேட்ட சர்வதேச சமுதாயம் இதைத் தட்டிக்கேட்க மறுப்பது அல்லது மறப்பது என்ன நியாயம்?

இதுதான் இன்று ஈழத் தமிழ் மக்கள் எழுப்பும் இதய ஒலியாகும்.

-தமிழீழதாசன்

படிப்பகம்

# 'கிறீன்பெறற்ட்ஸ்' இலங்கை படையினருக்கு பயிற்சி அளிப்பது தமிழரை அழிக்கும் செயல்

## ஐ.நா. அரசியல் விவகாரப் பணிப்பாளரிடம் ஜோசப் எம்.பி. புகார்

"இலங்கையில் நிரந்தர அமைதியும் சமாதானமும் ஏற்பட வேண்டுமானால் மூன்றும் தரப்பு மத்தியஸ்தத்துடன் அரசு விடுதலைப் புலிகளுடன் பேசி தமிழ் மக்களின் நீண்ட காலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை அடைய முயற்சிக்க வேண்டும். விடுதலைப் புலிகளைத் தவிர்த்து வேறு எவருடன் பேசுவதிலும் எந்த வித பயனும் கிடையாது. இது தான் வடகிழக்கின் யதார்த்த நிலையாகும்" என்று மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யும் தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினருமான ஜோசப் பரராஜசிங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார பணிப்பாளர் பிரான்சிஸ் வென்றலிடம் தெரிவித்தார்.

### கைதுகள் கற்பழிப்புகள்

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினை சம்பந்தமாக சில அமெரிக்க காங்கிரஸ், செனட் பிரதிநிதிகளையும் அமெரிக்க இராஜங்க அமைச்சின் உயர திகாரிகளையும் ஏற்கனவே வாஷிங்டன் நகரில் சந்தித்துப் பேசிய ஜோசப் பரராஜசிங்கம் ஐக்கிய நாடுகள் சபையின் சில உயர் அதிகாரிகளையும் சந்தித்து பேசியுள்ளார்.

இச்சந்திப்பின் போது வடகிழக்கு மகாணாத்தில் முக்கியமாக மட்டக்களப்பு யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய பகுதிகளிலும் கொழும்பும் அதன் சுற்றுப்புறம் ஆகிய பகுதிகளிலும் இலங்கைப் படைகளாலும் பொலிஸாராலும் தமிழ் மக்கள் தொடர்ந்து துன்புறுத்தப்படுவது வகை தொகையற்ற கைதுகள் அரச படைகளால் கைது செய்யப்பட்டு காணாமற் போகும் சம்பவங்கள், தமிழ் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் கற்பழிப்பு சம்பவங்கள் போன்றவற்றை அவர் விரிவாக எடுத்துக் கூறினார்.

### வறுமையின் பிடியில் மக்கள்

அத்துடன் மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச படைகளால் மேற்கொள்ளப்படும் கண்மூடித்தனமான ஷெல்லடி தாக்குதல்களினால் பல அப்பாவித் தமிழ் மக்கள் பலியாகியுள்ள சம்பவங்கள் தொடர்பாகவும் அப்பகுதியில் வாழும் மீனவர்கள், விவசாயிகள், அவர்களது தொழில்களை முழுமையாக தொடர முடியாத கட்டுப்பாடுகள் காரணமாக இம்மாவட்ட மக்கள் தொடர்ந்து வறுமைக்கோட்டின் விளிம்பிற்குத் தள்ளப்பட்டுள்ளதையும் விரிவாக புள்ளி விபரங்களுடன் எடுத்துக் காட்டினார்.

காலத்துக்காலம் அரசு மனித உரிமைகள் பேணப்பட வேண்டுமென்று அரச படைகளுக்கு பணிப்புரைகள் வழங்கி வரும் போதிலும் இப்பணிப்புரைகள் முறையாக படைகளால் கடைப்பிடிக்கப் படுவதில்லை. மாறாக இவை உதாசீனம் செய்யப்படுகின்றது எனவும் ஜோசப் எம்.பி பேச்சுக்களில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுபோன்ற மனித உரிமை மீறல்களுக்கு அதிகாரம் வழங்கும் கொடிய சட்டங்களான பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகாலச் சட்டம் போன்றவற்றை முற்றாக அகற்றவோ அல்லது அச்சட்டங்களில் அமைந்துள்ள பாரதூரமான கருத்துகளை அகற்றவோ இதுவரை காலமும் அரசு முன் வராதது துரதிருஷ்டவசமாகும். எனவே தமிழர்களுக்கு எதிரான இது போன்ற மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்த வேண்டிய கடமை சர்வதேச சமூகத்திற்கும் அமெரிக்க அரசுக்கும் உண்டு என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

### சிறீலங்கா அரசின இரும்புத்திரை

பாதிக்கப்பட்ட இராணுவக் சட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு பத்திரிகையாளர்கள், சுதந்திர பார்வையாளர்கள், அரசு சார்பற்ற தொண்டர் ஸ்தாபங்கள் சென்று பார்வையிடுவது அரசால் கட்டுப் படுத்தப்பட்டுள்ள காரணத்தால் உண்மையான நிலைமைகளை வெளிநாடுகளில் அறிவதற்கான வழியை அரசு மறைக்க முயல்கின்றது என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

தமிழர்களுக்கு எதிரான மனித உரிமை மீறல்கள் நடைபெறும் வேளையில் அமெரிக்காவின் விஷேட அதிரடிப்படை கொமாண்டோ பிரிவான 'கிறீன் பெறற்ஸ்' இலங்கை இராணுவப் படையினருக்கு பயிற்சி அளிப்பது தமிழ் மக்களை மேலும் அழிக்கும் ஒரு செயலாகும் என்றும் இப்பயிற்சி அளிப்பு வழங்குதல் போன்றவற்றையும் ஆயுதங்கள் வழங்குவதையும் அமெரிக்க அரசு நிறுத்துவதற்கான வற்புறுத்தலை ஐக்கிய நாடுகள் சபை மேற்கொள்ள வேண்டும் என்றும் இச்சந்திப்பின் போது அவர் வலியுறுத்தினார்.

அமெரிக்க காங்கிரஸ் சபையின் சர்வதேச உறவு கமிட்டியின் தலைவரும் காங்கிரஸ் பிரதிநிதியுமான பெஞ்சமின் கில்மனையும் ஜோசப் எம்.பி. சந்தித்துப் பேசினார்.




அன்புள்ள ஆசிரியரே!

ஈழத் தமிழர் பாதுகாப்புக்கழகம் தங்கத்துரை, மக்ருப் படுகொலைகளைக் கண்டித்து வெளியிட்டிருந்த அறிக்கை வரவேற்புக்குரியதாய் அமைந்துள்ளது.

கவிதைச் சரத்தில் மலர்ந்திருந்த பூக்களில் போதிய அளவு மணம் இல்லையென்றாலும் 'உன்னைச் சுமந்து பார்!' என்ற கவிதையில் வார்த்தைகள் அர்த்தப்பட்ட விதம் அருமையாக இருந்தது. தர்மஜாவின் 'எதார்த்தங்கள்' நடைச்சித்திரம் ஈழ அகதிக்குடும்ப வாழ்நிலைப் போக்கை வரைபடமாகத் தந்து மனதைக் கனக்கச் செய்தது.

'ஒரு சவூதி மோகம் கலைகிறது' தரமான சிறு கதையாகத் தொடர்கிறது. ஈழவேட்பனின் கவிதைகள் நெஞ்சைத் தொட்டன. 'ஒரு குறளை உணர்வோம்', 'குயுக்தியர் பதில்கள்' இன்ன பிறவும் வழக்கம் போல் பிரகாசித்தன.

கவிஞர்-கே செகநாதன்,
சிறு லைப்பூண்டி-604 204.

"எதிரிகளின் படுகொலை போதாதா? எமக்குள்ளும் கொலைகளா?" என்ற ஆசிரியவுரை அருமையிலும் அருமை. அதற்கு மேற்கோளாகக் கொடுத்திருந்த 'உலகநீதி'யின் பாடலும், அதற்கு எழுதியிருந்த உரையும் நல்ல தேர்வு.

செ.பா மணிமாறன், விருத்தாசலம்

தி.மு.க. அமைச்சரவை ஏற்பட்டும் அகதிகளான எம்மிடம் காட்டப்படும் அலட்சியம் நீங்க வில்லையே என்று வருந்திக் கொண்டிருந்த எங்களுக்கு கொண்டம் முகாமில் அமைச்சர் பிச்சாண்டி கலந்து கொண்டு மாணவர்களுக்குக் குறிப்பேடுகளை வழங்கி, ஆற்றியவுரை மனதிற்கு ஆறுதல் தந்தது.

S. ஸ்ரீஸ்கந்தராஜா, கோவை.

ஈழத் தமிழ் மக்களுக்காக இந்திரா, எம்.ஜி.ஆர். காலத்தில் இந்தியா படைத்த வரலாறு பற்றி, முன்னாள் தமிழக நிதியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் குறிப்பிட்ட சொற்பொழிவின் பகுதி படிக்கும்போதே இனித்தது. அந்தக் காலகட்டம் மீண்டும் வருமா என்று ஏங்குகிறோம்.

ஜே. பத்திநாதன், மதுரை-1.

'தங்கா! நீ சென்றது எங்கே?' என்ற படுகொலைக்களான தங்கத்துரை பற்றி ஈழவேட்பன் எழுதிய கவிதை இதயத்தைத் தொட்டது.

"தற்கொலைப் பாதையைத் தமிழ் இளைஞர்கள்
சார்வதை எண்ணி மறைந்தீரோ
ஒற்றுமை படைக்க அமரர் செல்வாவை
உடன் அழைத்துவர விரைந்தீரோ?"

என்கிற வரிகள் கண்ணீர் சிந்த வைத்து விட்டன. அதைப் போலவே 'கொலைவெறியாளரே கொஞ்சம் நில்லுங்கள்!' என்ற பாட்டில்

ஈழத் தலைகளை வேட்டையாடியா
ஈழம் அமைக்கப் போகின்றீர் ?
வாழத் தொடங்கிய போரை-நம்மை நாம்
வாரிக் கொடுக்கவா நடத்துகின்றீர்?"

என்கிற வரிகள் ஈழப்போராளிகள் என்போர் சிந்திக்க வேண்டிய சிறப்பு கொண்டவையாகும்.

G.K. ராமணன், வேலூர்.

"செல்வா வழி மீறப்படாதவரை ஈழத் தமிழர்களுக்கு சிக்கல் இல்லை" அவர்வழிதான் என்றும் ஆக்கவழி என்ற தலைப்பிலான தமிழகக் கல்வியமைச்சர் மாண்புமிகு அன்பழகன் பேச்சு அறிவார்ந்ததாக உள்ளது. அவர் பங்கு பற்றும் திமுக அரசு உறுதியாகச் சில நடவடிக்கைகளை மேற்கொண்டால், எமது ஈழத்தமிழர்களுக்கு சிறிது ஆறுதலாவது கிட்டும்.

சார்லஸ் அம்பலவாணர், திருநெல்வேலி.

### இந்தியத் தாயே!

'சுதிர்'

இன்னமும் பாராமுகம்
ஏனம்மா-ஏழை
இடர் தவிப்பதும்
பாரம்மா!-அம்மா
தாயிருக்கப்பிள்ளை
ஏங்கலாமோ?-இங்கு
நீயிருக்க நாங்கள்
வாடலாமோ?...

## செய்திச்சரம்

30-7-97

இலங்கை அதிபர் சந்திரிகாவை கொல்ல 5 புலிகள் சதித் திட்டம் தீட்டியதாக கடந்த வாரம் கொழும்பில் பொலீஸ் உளவுப்பிரிவினர் கைது செய்தனர். இந்த 5 பேரில், 2 பேர் புலிகளின் தற்கொலைப் பிரிவைச் சேர்ந்தவர்கள்

(தினமணி, தினகரன், தினமலர், தினத்தந்தி, கதிரவன்)

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் 10-வது ஆண்டு நிறைவு தினத்தையொட்டி புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்று இலங்கையில் பொலீசும் இராணுவமும உஷார் நிலையில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

(தினமணி, கதிரவன்)

இலங்கை கடற்படை இந்திய கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து தமிழக மீனவர்களை சுடுவதை ஏற்றுக்கொள்ள மாட்டோம் என்று சென்னையில் நடந்த தேசிய பாதுகாப்புச் சூழல் கருத்தரங்கில் இந்திய இராணுவ தலைமை அதிகாரி மேஜர் ஜெனரல் ரஞ்சித் சிங் நாக்ரா கூறியுள்ளார்.

(தினமணி, தினகரன்)

கச்சத்தீவில் இலங்கை கடற்படையினர் முகாமிட்டு, ரோந்து சுற்றி வருவதாக இராமேசுவரத்துக்கு நேற்று தகவல் கிடைத்துள்ளது.

(தினமணி)

31-7-97.

அரசின் உத்தேச கல்விச் சீர்திருத்தத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து, கொழும்பில் பிரதான கோட்டை ரயில் நிலையத்துக்கு வெளியே சுமார் 2000 மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

(தினமணி)

தமிழக மீனவர்களை இலங்கை ராணுவம் சுட்டுக் கொல்வதைக் கண்டித்து சென்னை இலங்கை தூதரகம் அருகே த.மா.கா-வினர் நேற்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தினமணி, தினகரன்
தினமலர், தினத்தந்தி, கதிரவன்)

தமிழக மீனவர்களை பாதுகாக்க கச்சத்தீவை மீட்க வேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தி.க. தலைவர் கி. வீரமணி தாக்கல் செய்த ரிட்மனுவை ஏற்று, மத்திய மாநில அரசுகளுக்கு நோட்டிஸ்அனுப்பியுள்ளது.

(தினமணி, தினமலர், தினத்தந்தி, கதிரவன்)

www.padippakam.com



# ஒரு சவுதி மோகம் கலைகிறது...!

செல்வி சித்திரா தேவசீகாயம்
இ.அ.முகாம், போகநல்லூர், நெல்லை

## சிறுகதை

(சென்ற இதழ் தொடர்ச்சி)

கண்ணன் அப்படி சொன்னதற்கு காரணம் இருந்தது. ராதாவும் மேனகாவும் இலங்கையில் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள். சிறு வயதிலிருந்தே ஒன்றாகப் படித்தவர்கள். நல்ல தோழிகள். ஆனால் ராதாவுக்கு வந்த கடுமையான காய்சலின் காரணமாக ஆறாம் வகுப்போடு படிப்பை நிறுத்திக் கொண்டாள். ஆனால் மேனகா மேல் வகுப்பு வரை படித்தவள். என்றாலும் அவர்கள் நட்பு விட்டுப்போகவில்லை. இங்கும் முகாமில் ஒரே முகாம் என்பதால் அந்த நட்பு மேலும் உறுதியாய்த் தொடர்ந்தது. ராதாவிடம் அன்பும், பண்பும் நிறைந்து இருந்தால் மேனகாவிடம் அத்தோடு அறிவு என்ற ஒன்றும் கூடுதலாக இருந்தது. அதனால் தன் அறிவுக்கு, சிந்தனைக்கு எட்டாத விடயங்களைக் கணவன் கண்ணனிடமும் தோழி மேனகாவிடமும் ராதா கேட்பது வழக்கம்.

மறுநாள் மேனகா வீட்டுக்குச் சென்ற ராதா நேற்று வந்தவர்களைப் பற்றி விபரம் கூறிய போது......

மேனகா சிரித்தபடி... 'என்ன ராதா உனக்கும் சவுதி மோகம் வந்திட்டுதா?' என்று கேட்க...

'உனக்கென்ன நீ ஒரே ஆண்பிள்ளைய பெத்து வச்சிருக்கே! எனக்கு மூன்றும் பெண் பிள்ளைகள் ஆச்சே அதனால என் கணவரும் இங்கு மிகவும் கஷ்டப்படுறார் அதோட நாளைக்கு அதுகளுக்கு ஒரு நல்லது வரும் போது'...என்று ராதா இழுக்கவும்...

''அப்ப இப்பவே உன் பிள்ளைகளுக்கு சீதனம் சேர்க்கப் போறே என்று சொல்லு'' என்று மேனகா சொன்னதும்...

''அதுல என்ன தப்பு? மேனகா'' என்றாள் ராதா. 'நீ இனிமேல் தான் தப்பே செய்யப்போறே'என்றமேனகாவை புரியாமல் பார்த்தாள் ராதா.

''ஏன் ராதா உன் கணவர் உன்னை சொத்து சுகம் பார்த்தா கல்யாணம் பண்ணிக் கொண்டார்''

'அதில்ல மேனகா, என் கணவர் மாதிரியே என் பிள்ளைகளுக்கு வாரவங்களும் எதையும் எதிர் பார்க்க மாட்டாங்க என்று எப்படிச் சொல்ல முடியும்?'என்ற ராதாவிடம்...

'ராதா நீ உன் பிள்ளைகளோட எதிர்காலத்த மட்டும் சிந்திக்கிறே. அவங்க நிகழ்காலத்தைப் பற்றியும் கொஞ்யோசிச்சுப்பாரு. நிகழ்காலத்த நல்லா அமைத்துக் கொண்டால்தான் ராதா எதிர்காலம் சிறப்பா இருக்கும்.

சரி நீ சவுதி போயிட்டே என்று வைத்துக்கொள். அங்கு நீ உன் பிள்ளைகளைப் பிரிந்த ஏக்கத்தோடும், கண்ணீரோடும் யார் யார் பிள்ளைகளையே வளர்த்திட்டிருப்பே. இங்கிருக்கும் உன் பிள்ளைகளோட நலனுக்காக. ஆனா இங்க உன் பிள்ளைகள் சீரழிஞ்சிட்டிருக்கும். அவர்களின் தந்தை கவனித்துக் கொள்வார் என்று நீ சொல்லலாம். ஆனால் ஒரு தாய் மாதிரி தந்தையினால பிள்ளைகளை கவனித்துக் கொள்ள முடியாது ராதா. எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில்பிறக்கையிலே. பின் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என்று சும்மா பாடவில்லை ராதா அந்தக் கவிஞன். கண்களைக் காக்க இமை கூட இருக்கும் போதே அந்த இமையையும் மீறி சில சமயம் கண்ணில தூசி விழுந்து விடுகிறது. அந்த இமையே கொஞ்ச நாளைக்கு கண்களை விட்டுப் பிரிந்திருந்தா அந்தக் கண்களோட கதி என்ன ஆகும்? குழந்தைகள் கண்கள் மாதிரி. தாய் இமை மாதிரி தாயின் சரியான வழிகாட்டல் இல்லாம சின்ன வயசில குழந்தைகளோட எண்ணங்களும், சிந்தனைகளும் சிதறிப் போச்சுதென்றால் ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது ராதா. உன் சவுதிப் பணத்தால அத சரி பண்ண முடியுமா?' என்ற மேனகா மேலும் தொடர்ந்தாள்...

'அது மட்டுமில்ல ராதா நீ இருக்கு மட்டும் உன் கணவர் நல்லவர். நீ வெளி நாட்டுக்குப் போன பிறகு அவர் வேறு துணை நாடமாட்டார் என்று என்ன நிச்சயம்?' 'மேனகா இப்படிக் கேட்டதும்... நிச்சயம் அவர் அப்பிடிச் செய்ய மாட்டார்'என்று அவசரமாக மறுத்தாள் ராதா.

''அப்பிடிச் சொல்லாத ராதா. சந்தர்ப்பமும்,சூழ்நிலையும் ஒருவரை மாற்ற வாய்ப்பிருக்கு'' மேனகா இப்படிச் சொன்னதும்...

'இல்ல என் கணவர் நிச்சயம் மாறமாட்டார். அவர் ஆயிரத்தில இல்ல இலட்சத்தில ஒருவர்' உறுதியாகச் சொன்னாள் ராதா.

'சரி! சரி இப்ப நான் ஒன்று கேட்கிறேன் நீ வருத்தப்படக் கூடாது' என்ற மேனகா, 'உன்கணவர் இலட்சத்திலே ஒருவர் என்று சொல்றியே அப்பிடிப்பட்டவருக்கு நீ துரோகம் பண்ணப் போறியா?' மேனகாவின் இந்தக் கேள்வியால் ராதா அதிர்ந்தாள். 'மேனகா நீ என்ன சொல்றே' என்ற ராதாவின் கேள்விக்கு மேனகா பதில் சொன்னாள்.

'ஆமாம் ராதா நீ சவுதிக்கு போறதெண்டால் உன்ன இங்கிருந்து உடனே அனுப்பி வச்சிறமாட்டாங்க. கொழும்புக்கு போக வேண்டும் என்பார்கள். அங்கிருந்து பிளைட் என்பார்கள் ஆனால் உன்ன அங்க தவறான பாதைக்கு அழைத்துச் செல்ல வாய்ப்பிருக்கு.' இதைக் கேட்டதும் ராதாவின் உடலில் நடுக்கம் ஏற்பட்டது.மேனகா தொடர்ந்தாள்...

''சரி ஏதோ உன் அதிர்ஷ்டம் அப்பிடி எதுவுமே நடக்காம நீ சவூதிக்கு போயிட்டே என்று வச்சிக்கொள். நல்லதும் கெட்டதும் கலந்ததுதான் ராதா இந்த உலகம். ஆனாலும் கெட்டதுதான் அதிகமாக இருக்கு. நீ போற வீட்டு எஜமான் கூட நல்லவரா இருந்திட்டாலும் அந்த வீட்ல உள்ள அத்தனை பேரும் நல்லவங்களா இருப்பாங்க என்று எதிர் பார்க்க முடியாது. நல்லா யோசிச்சுப்பாரு ராதா நம்ம உள் நட்டிலேயே கஷ்டப்பட்டதுகள் ஒரு வீட்ல வேலைக்குப் போகும்போது எத்தனையோ தவறுகள் நடந்திடுது. உறவுகள் பக்கத்தில் இருந்தும் தடுக்க முடியாமல் அந்தத்தவறுகள் நடக்கையில் இது எத்தனையோ மைல்களுக்கப்பால அந்த நாலு சுவருக்குள்ள பாச புரியாத வீட்ல நாட்ல உனக்கு என்ன பாதுகாப்பு இருக்கும்? அங்க ஒரு தவறு நடக்க நேர்ந்தா அத உன்னால தடுக்க முடியுமா ராதா? உன் கூக்குரலுக்கு அங்கு யார் செவி சாய்ப்பார்! மிஞ்சி மிஞ்சிப் போனா மாடியில இருந்து விழுந்து தற்கொல பண்ணிக்குவே! தவறி விழுந்து. செத்துப் போயிட்டதா பார்சல் பண்ணி இங்க அனுப்பி வச்சிடுவான். அதுவும் இல்லை என்டா ஏதோ ஒரு உணர்ச்சி வேகத்தில யாரோ ஒருவனை கொலை பண்ணிட்டு தூக்குத் தண்டனைக் கைதியா சவுதி ஜெயில்ல கம்பி எண்ணிட்டு இருப்பே.'' ராதாவுக்கு விறு விறு என்று வேர்த்துக் கொட்டியது. மேனகா தொடர்ந்து பேசினாள்...

''ராதா நீ பத்திரிகைகள் சஞ்சிகைகள் படிக்காததினால உனக்கு நடைமுறை தெரியல்ல. பிலிப்பைன்ஸ் நாட்டைச் சேர்ந்த சாரா என்ற ஒரு இளம் கன்னிப் பெண் தன்னிடம் தவறாக நடக்க முயன்ற தன் வீட்டு எஜமானைக் கொலை செய்துவிட்டு சவுதியில் தூக்குத் தண்டனை கைதியா கம்பி எண்ணிக் கொண்டிருக்கிறாள். அவளுக்காக அவளின் விடுதலைக்காக உலகப்பெண்கள் அமைப்புகளெல்லாம் போராடிக் கொண்டிருக்கின்றன என்பது உனக்குத் தெரியநியாயமில்லை. இங்க பாரு ராதா நீ உன் கணவரோட குடும்பப் பாரத்த குறைக்க நினைத்தால் உன் பிள்ளைகளுக்கு ஒரு நல்ல எதிர்காலம் வேணும் என்றுநினைச்சா ஒரு நல்ல கைத்தொழிலை கற்றுக் கொள். அதன்மூலம் உன் குடும்பத்தை முன்னேற்றப் பாரு. அத விட்டுட்டு சவுதி அது இது என்று மனசப் போட்டுக் குழப்பி, உனக்கு கிடைச்சிருக்கிற நல்ல வாழ்க்கைய சீரழிச்சிட்டாய் என்றால் அதன் பிறகு நீ எவ்வளவு அழுதாலும் தொழுதாலும் உன் பழைய வாழ்க்கை உனக்கு திரும்பக் கிடைக்காது'' என்று கூறி முடித்த மேனகா,

நிலை குலைந்து உடம்பெல்லாம் வேர்த்துக் கொட்டிக்கொண்டிருந்த ராதாவைப் பார்த்து ''என்ன ராதா பயந்திட்டியாம்மா'' என்று கேட்கவும்...

''இல்ல மேனகா உணர்ந்திட்டன் சவுதிக்குப் பெண்கள் போனா மொத்தமா குடும்பமே சீரழியும் என்பதைநல்லா உணர்த்திட்டன். என்னைப் போல நல்ல வாழ்க்க கிடைச்சும் வெளி நாட்டுக்கு போகத் துடிக்கும் பெண்களும் இத உணரணும். குடும்பத்த காப்பாத்த முடியாம கோழைத்தனமா மனைவிமார வெளி நாட்டுக்கு அனுப்புற கணவர்மாரும் இதை உணரவேணும் கன்னிப் பெண்கள அனுப்புற பெற்றோர்களும் உணர வேண்டும்'' என்று உணர்ச்சிகரமாகப் பேசிக்கொண்டிருந்த ராதாவின் கைகளை இறுக்கமாகப் பற்றிக் கொண்ட மேனகா ''இப்பதான் நீ சவுதி மோகம் கலைந்த என் பழைய தோழி ராதா'' என்று ஆனந்தப்படவும்...

''சரி மேனகாஇன்றைக்கு சனிக்கிழமை பிள்ளைகள் வீட்ல நிக்கிறாங்க நேரத்துக்கு சமையல் பண்ண வேணும் வரட்டுமா'' என்று விடை பெற்று வெளியேறியவளின் காதுகளில் எங்கோ ஒரு வீட்டில் ஒலித்துக் கொண்டிருந்த வானொலியில் சிறுவர் உலகம் நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்க அதில் மழலைகள் சேர்ந்து ''கைத்தொழில் ஒன்றைக் கற்றுக் கொள். கவலை உனக்கில்லை ஒத்துக் கொள்'' என்று பாடிக் கொண்டிருக்க சவுதி மோகம் முற்றாக கலைந்திருந்த ராதாவின் நெஞ்சத்தில் அந்தப் பாடல் வரிகள் மட்டும் ஆழமாய்ப் பதிய ஒரு தெளிவான நம்பிக்கையோடு தன் வீட்டை நோக்கி நடந்தாள் ராதா.

---

# திண்டுக்கல் மாவட்ட முகாம் மாணவர்கட்கு குறிப்பேடுகள் வழங்குவிழா

கடந்த 11-7-97 அன்று மாலை திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள அகதி மாணவர்களுக்கான குறிப்பேடுகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் பல தொண்டு நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர் இந் நிகழ்ச்சிகள் கோபால்பட்டி முகாம், அடியனூத்து முகாம், தோட்டனூத்து முகாம்களில் நடைபெற்றன. இந் நிகழ்ச்சிகளில்

எம்.எம்.எஸ்.எஸ். சார்பில் திரு பாக்கியராஜா, எஸ் எம்.எஸ்.எஸ். சார்பில் திரு. செல்வராஜ், இக்காஸ் சார்பில் திரு. சாமுவேல், உழைப்பாளர் மையம் சார்பில் திரு. தேவதாஸ், டி எம் எஸ்.எஸ். சார்பில் இயக்குனர் எப்ஆர். யோசப் செல்வராஜ், எண்டு இன் எண்டு சார்பில் திரு. டைசன், மக்கள் பார்வையாளர் சார்பில் திரு. வனராஜா மற்றும் திரு. சாம் கோயில் பிள்ளை, திரு. அகிலன், திரு. மகேஸ்வரன் (ஈ.ஏ.ம. மண்டலப் பொறுப்பாளர் நெல்லை) செல்வி. பிரிஜ்ஜெட் இணைச் செயலாளர் (ஈ.ஏ.ம தலைமைக் கழகம் சென்னை) ஆகியோர் கலந்து கொண்டனர்.

### கோபால்பட்டி முகாம்

கோபால்பட்டி முகாமில் குறிப்பேடுகள் வழங்கும்நிகழ்ச்சியில் கழகப் பொருளாளர் திரு. சா.செ. சந்திரகாசன் அவர்களும் கலந்து கொண்டார். பொருளாளர் கோபால்பட்டி முகாம் வருகை தந்த போது முகாம் தலைவர் மற்றும் மக்கள் வரவேற்பு அளித்தனர். பொருளாளர்-முகாமை முழுமையாகச் சுற்றிப் பார்த்தார்கள். நோயாளிகள் பலரையும் சென்று பார்வை இட்டார். பின்னர் குறிப்பேடுகள் வழங்கிடும் நிகழ்ச்சி நடைபெற்றது. கழக இசைக் குழுவினர் அகதிப் பாடல்கள் பாட நிகழ்ச்சி ஆரம்பமாகியது. எஸ்.எம். எம். எஸ். திரு. செல்வராஜ்-திரு. டைசன் ஆகியோரும் உரை ஆற்றினார்கள். பின்னர் பொருளாளர் அவர்கள் உரையாற்றி மாணவ மாணவிகளுக்கு தமது கரங்கவால் குறிப்பேடுகள் வழங்கினார். முகாம் குழுவினரின் நன்றி உரையுடன் விழா இனிதே நிறைவேறியது.

தொகுப்பு :
அன்பு செல்வராஜ்

படிப்பகம்

www.padippakam.com



# கவிதைச் சரம்

## இந்தியத் தாயே எம்மைப்பார்!

'செல்வி சித்திராதேவசகாயம்'

இந்தியத் தாயே-உன்
ஈழ மகளை
இரு விழி கொண்டு
ஒரு தரம் பார்!
அங்கே பார் !
உன் மகள் ஈன்றெடுத்த
இனிய தமிழ் இனத்தின்
துன்பக் குருதியிலே
களித்துக் குளித்திடும்
கழுகுகளைப் பார்!
ஒற்றைத் தமிழனின்
ஓர் உயிரை
சித்திர வதை என்னும்
சீரிய வேதனைக்குள்
சிக்க வைத்து
சிறகொடிக்க
எத்தனை! எத்தனை!
சித்திர குப்தர்கள்
அங்கே பார் !
நன்றாகப் பார் !
இமைக்காதே கண்களை !
இமைக்காதே!
இமைத்தால்......
இமய மலையையே
சோற்றுக்குள் புதைத்துவிடும்
எமதர்மர்கள் அங்கே!
(இமைக்காதே)
ஒண்ட வந்த
அரக்க இனத்திற்கு
உன் தங்க மகள்
தங்க இடம்
கொடுத்ததெல்லாம்
தமிழ் இனத்தின்
மடத்தனம்தான்!
இல்லை என்று
ஒரு போதும் சொல்லவில்லை!
இருந்தாலும்......
வந்த நிலை மறந்தவராய்
வழி தேடி வந்தவர்கள்
இன்று-ஈழத் தமிழ் இனத்தின்
விழி தோண்டி
வாழ்விழக்கச் செய்யலாமா?
பாரதத் தாயே!
இமைக்காதே கண்களை!
இன்னும் பார்
எம் இன்னலை!
ஈழத்தமிழ் தேசத்தின்
நிலையைப் பார் அங்கே!
உண்ண உணவில்லை!
உடல் நோய்க்கு
மருந்து தானில்லை!
துடிக்கும் தமிழனின் உயிருக்கு
அங்கு கடைசி நொடியிலும்
ஒரு சொட்டுத் தண்ணியில்லை!
என்ன கொடுமையிது
பார்த்தாயா...!

(தொடரும்)

## நினைவலைகள்

வேலியோடு ஒட்டிச்சென்ற ஒற்றையடிப்பாதை
அதன் ஓரங்களில் படர்ந்திருக்கும் சிறுநெறிஞ்சி
அதையாரும் கண்டுகொள்ளா விட்டாலும்
அதன் மீது தெளிக்கப்பட்டிருக்கும் மஞ்சள் நிறப்பூக்களை
கண்டுர ரசிக்காதவர் யாருமில்லை
காணியின் நடுவே நிற்கும் கொண்டல் அதன்
மஞ்சள் மலர்களைக் கோர்த்துச் சரமாக்கியிருக்கும்
அதிலிருந்து உதிரும் பூக்களைப் பாக்கக்
கண்கொள்ளாக் காட்சி! அவைகளுக்கே உரித்தான
பாணியில்
ஒரு நறுமணம்! ஒருவித நறுமணம்!
அதற்கடுத்தாற்போல் வேலியில் பூத்திருக்கும் முருங்கை
பச்சிலைப் பாம்புகளாய் தனது வாரிசைக் காற்றிலாட
விட்டபடி
பெருமிதத்துடன் தானும் அசைந்தாடும்
வேம்பு பலா மா முந்திரி இவைகளும் பசுமைக் கவர்ச்சியில்
குளிர்ச்சியாய்க் கவரும்!
மிளகாய்ச் செடிகளின் சிவந்த புன்னகையாக அதன்
சந்ததிகளின் செழுமை!
அடுத்த மண்மேட்டில் வெங்காயத்தின் சாம்பற் பசுமை
யாரோ தட்டினார்கள்,
கடந்த கால நினைவுகளிலிருந்து சுயநினைவிற்கு வந்தேன்!

## களத்திலிருந்து காதலிக்கு...

தன் மாமன் மகளுக்கு ஈழத்தில் போராட்டக்குழுவில் இருந்து மச்சான் எழுதும் ஏக்கம் சுமந்த மடல்.

செட்டிகுளம், வவுனியா.

பெறுநர் : இலங்கை அகதி முகாம்
தமிழ்நாடு, இந்தியா.

அன்புள்ள ஆருயிர் பேஜினிக்கு
உன் நினைவில் வாழும் அத்தான் டைசன் எழுதுவது
நான் நலம். அங்கு மாமா மாமி நலமா ?
மற்றும் உன் அன்பு மடல் கிடைக்கப்பெற்றேன்
மகிழ்ச்சியென்றாலும் கவலை தானே பெருக்கெடுக்கிறது!
இந்த நாட்டுப்பிரச்சினையில் பந்தம் எல்லாம்
இழந்தேன் உன்னைத்தவிர!
எல்லாவற்றையும் நினைத்து நினைத்து
மனம் பல துண்டுகளாக உடைகிறது
எங்கள் தோட்டத்தில் ஒளிந்து பிடித்து விளையாடியது!
மாமரத்தில் ஊஞ்சலாடி கயிறறுந்து விழுந்தது!
வாய்க்கால் தண்ணீரில் இறங்கிக் கலக்கிச் சேறாக்க
அப்பா துரத்தி,உன்னைத் தூக்கிக்கொண்டு ஓடியது,
நான் பேசுவதையும் எனது அசைவையும் வைத்து
ரஜினி என்பாயே என்னுயிர் பேஜினி;
அன்றொரு நாள் இரவில் நிலாச்சோறு சாப்பிட்டோம்
அந்த நிலவு வரும் நாட்களில்
உன்னை நினைத்து அழுத நாட்களும் உண்டு
எதை எதை எழுத எதை நினைத்து அழ
நீ சிறுவயதில் நல்ல அழகாய் இருப்பாய்
இப்பொழுது ஏழு வருடம் ஆகிவிட்டது-
நீ எப்படியிருக்கிறாய் மைவிழியே
நம் நாட்டுக் கலவரத்தில் நீயொரு தேசம்
நானொரு தேசம் ஆகிவிட்டோம்
நமக்கென்று ஒரு விடியல் இன்னும் வரவில்லை;
வருமே ஒரு நாள் அன்றுதான் நமக்குத் திருநாள்
காத்திருப்பேன் மனவேதனையோடு... மடலை முடிக்க
மனமின்றி நிறைவு செய்கிறேன் மடல் கண்டதும்
பதில்போடு
இப்படிக்கு உன் அன்பு அத்தான் டைசன்

P.S.ஜேக்கப் டைசன், (நலப்பணியாளர்)
இ.அ முகாம், கும்மிடிப்பூண்டி.

## அவள் வருவாளா?

(தாய் மண்ணை பிரிந்து தமிழகத்திற்கு தனியே வந்து ஈழத்திலிருந்த தன் தாயை இழந்து தன் கடன் தீர்க்க தவறிய ஒரு தனயனின் சோகப் புலம்பல்)

ஐயிரண்டு திங்களாக-என்னை
அடிவயிற்றில் சுமந்தாளே
அல்லல்பட்டு அவதிப்பட்டு-மிக
அழகாக எனை ஈன்றாளே

அன்போடு அரவணைத்து-தன்
பாலூட்டி வளர்த்தாளே
சுமந்த கடன் தீர்க்க முடியலையே
மீண்டும் அவள் வருவாளா?

நிலவினைக் காட்டிக் காட்டி-நிதம்
சோறூட்டி வளர்த்தாளே
சுமைதாங்கி எனத் தினமும்-எனைத்
தோள் மீது சுமந்தாளே
சுமையாக தனிச்சுகமாக-நான்
பல்லக்கு உலா வந்தேனே
சோறூட்டிச் சுமந்த கடன் தீரலையே
மீண்டும் அவள் வருவாளா?

பள்ளிப் பிராயத்திலே-எனைப்
பக்குவமாய்த் தயார்படுத்தி
அன்பாக உணவளித்து-உடன்
பண்புடனே வழியனுப்பி
திரும்பி வரும் நேரம் வரை-நான்
வரும் வழியை நோக்கியவளே
கடன் தீர்க்க தவறினேனே-மீண்டும்
அவள் வருவாளா?

பெரியவரை அன்பு செய்து-உடன்
பிறந்தவரை அரவணைத்து
சிறியவர் பெரியவரோ-மற்றும்
உயர்ந்தவர் தாழ்ந்தவரெனும்
பேதமில்லை மறவாதே என-எனக்கு
பகுத்தறிவைப் போதித்தாளே
அக்கடன் தீர்க்க மறந்தேனே-மீண்டும்
அவள் வருவாளா?

தாய் மண்ணை இழக்கையிலே-என்
தாயவளைப் பிரிந்தேனே
சிரம் வெட்டும் வெறியரினால்-இன்று
தரம் கெட்டுப் போனேனே.
சொந்தத்தை மறந்தேனே-தனிப்
பந்தத்தில் விழுந்தேனே
கடல் தாண்டி ஓடிவந்து-பெற்றவள்
கடன் தீர்க்கத் தவறினேனே.
மீண்டும் அவள் வருவாளா!

பொல்லாத வீணர்களின்-கொலைப்
பொழுது போக்கு தீரவில்லை
சொந்த மண்ணை நாடி-நீயும்
வந்திடாதே மகனே என்றாள்
நோய் கண்டு வீழ்ந்த போது-அவள்
வாய் மூடிப் போகையிலே
வா என்று கேட்டும்-உன்னை
வந்து பார்க்க முடியலையே
மீண்டும் அவள் வருவாளா?

சுமந்து பெற்ற கடன் தீர-நான்
சுமந்து செல்ல முடியலையே
பாலூட்டிய கடன் தீர-அவளுக்கு
பாலூற்ற முடியலையே
அன்னமிட்ட கடன் தீர-என்னால்
அரிசி போட முடியலையே
ஏழு ஜென்மம் ஆனாலும்-என்
கடன் தீர வழியில்லையே
மீண்டும் அவள் வருவாளா?

உயிர்களைப் படைத்து ஆளும்
பிரம்மனே என் தேவாதி தேவா
என் தாயவள் கடன் தீர்க்க-நான்
ஏங்கியே தவிக்கின்றேன்
என் ஆயுள் முடிவதற்குள்-மீண்டும்
ஒரே ஒரு முறை-
என் தாய்க்கொரு ஜென்மம் கொடு!

-மலையூர் மனோ
ஆனைக்குட்டம் முகாம், விருதுநகர் மாவட்டம்

## அன்னையே சரணம்

உதயமோ என்றோ
ஓர் நாளில்
எங்கள் இதயமோ
இன்று போர்நாளில்
எதிர்காலக் கனவுகளோ
கண்ணெதிரில்
நிகழ்கால நிம்மதியோ
நித்தம் கண்ணீரில்
ஈழமோ இன்று எரிமலையாய்
எங்கள் ஓலமோ எங்கும்
எதிரொலியாய்
வஞ்சகரின் பிடியினில்
வாழ்விழந்தது தமிழினம்
வகைவகையாய்ச் சாதிப்
பெயர்களைக் கூட்டி
வழிபடுகிறதே தமிழகம்
இரத்த ஆற்றில் மடிகிறது
எங்கள் இனம்
இரக்கம் கொண்டு துடிக்க
-வில்லையா உங்கள்மனம்
தட்டிக் கேட்பீர்கள் என்று
தான்
தஞ்சம் புகுந்தோம்

எட்டிப் போகிறதே எம்
இந்தியத் தாயகம்
அன்னை நீயே எங்களின்
சரணம்
அதை மறுத்தால் புகலிடம்
எமக்கு மரணம்

எஸ். சுவாதி
இ. அ. முகாம்,
இராயனூர், கரூர்.

படிப்பகம்

www.padippakam.com

இலங்கை இனப் பிரச்சினை:

# அரசியல் தீர்வுக்கு இந்தியாவை தி.மு.க. அரசு வலியுறுத்துக!

## 'இந்து' நாளேட்டின் கட்டுரை

புவியியல் ரீதியான தொடர்ச்சியும், தமிழர்கள் என்ற இன உணர்வும், இந்தியாவை-குறிப்பாக தமிழ்நாடு அரசை, இலங்கையில் ஏற்படும் நிகழ்வுகளிலிருந்து ஒதுங்கியே நிற்க இனியும் அனுமதிக்காது.

ராசீவ் காந்தி படுகொலை சம்பவம் பொதுமக்களுடைய நினைவுகளிலிருந்து மங்கிப் போய்விடும் இந்தக் காலகட்டத்தில், இலங்கை நிலவரங்களை அரசியல் சக்திகள் எப்படி எடுத்துக் கொள்ளப் போகின்றன?

விடுதலைப் புலிகள் தலைவர் வி. பிரபாகரனைப் பொறுத்தவரை — அவரது போராட்டம் இன்று நாளையோடு முற்றுப் பெறக்கூடிய ஒன்றல்ல; நீண்ட-நெடிய காலகட்டத்தை உள்ளடக்கியது என பிரபாகரனே கருதுவதுடன், காலம் தமக்குச் சாதகமாக இருப்பதாகவும் துணிந்துள்ளார்.

### தலையிடாக் கொள்கை மாறட்டும்

இந்தப் பின்னணியில் தான் தி.மு.க வை தனது ஒருங்கிணைந்த பங்குதாரராகக் கொண்டுள்ள இந்திய அரசு தனது தலையிடாக் கொள்கையைத் திருத்திமாற்றியமைத்துக் கொள்ள வேண்டும். இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண வேண்டியதன் அவசர அவசியத்தினை கொழும்புக்கு உணர்த்திட வேண்டும் என நான் வாதிட்டு வருகிறேன்.

—இவ்வாறு வி. சூரிய நாராயணா தனது கட்டுரையின் முடிவில் கேட்டுக்கொண்டுள்ளார். கட்டுரையின் இதர பகுதிகளின் தமிழாக்கம் வருமாறு:

உலகம் நெடுகிலும் 130 மிலியன் பேர் இடம் பெயர்ந்து கொண்டே இருப்பதாக மதிப்பீடுகள் கூறுகின்றன. இதில் பெரும்பாலோர் பொருளாதார ரீதியாக இடப்பெயர்ச்சிக்குத் துணிகின்றனர். இதில் 27 மிலியன் பேர் அகதிகள்.

### கூடிவரும் அகதிகள் தொகை

கடந்த சில ஆண்டுகளில் அகதிகளின் எண்ணிக்கை திடுதிப்பென்று உயர்ந்து வருகிறது. அகதிகளுக்கான ஐ.நா. உயர் ஆணையரகத்தின் 1995ம் ஆண்டு வெளியீடான 'உலக அகதிகளின் அந்தஸ்து' என்ற நூலில்,

1991ல் 17 மிலியன்
1993ல் 23 மிலியன்
1995ல் 27 மிலியன்

என அகதிகளின் எண்ணிக்கை பெருகி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இப்படியெனில் ஒரு நாட்டுக்குள்ளேயே புலம் பெயரும் அகதிகளின் எண்ணிக்கைப் பெருக்கம் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

இது குறித்த விவரம்:
1984ல் ஆறு லட்சம் பேர்
1985ல் மூன்று மில்லியன்
1988ல் 5.6 மில்லியன்
1992ல் 24 மில்லியன்
1994ல் 23 மில்லியன்

ஆயுதப் போராட்டங்களும், இன ஒழிப்புகளும் பல்கிப் பெருகி வரும் நடப்புக் காலகட்டத்தில், வரும்ஆண்டுகளில் அகதிகளின் எண்ணிக்கை மேன்மேலும் பெருகும் என்றே அஞ்ச வேண்டியுள்ளது.

### குடிபெயர்ந்தோர் சொர்க்கம்

அகதிகளுக்குத் தஞ்சம் தரும் நாடுகளில் பல கருணையைச் சுருணையாக்கிடும் நிலைக்கு வந்துள்ளன. பனிப் போர் நடைபெற்ற ஆண்டுகளில் கம்யூனிச நாடுகளிருந்து வெளியேறியவர்களுக்கு லட்சிய வேறுபாடு என்ற காரணம்தான் இருந்தது. பனிப் போருக்குப் பிறகு நிலைமை குறிப்பிடத்தக்க அளவுக்கு மாறிவிட்டது.

வரலாற்றுஅடிப்படையில் பார்த்தால், அகதிகள்—புலம் பெயர்ந்தோரின் சொர்க்கமாக இந்தியா காட்சியளிக்கின்றது. எட்டாவது நூற்றாண்டில் மத வெறியாட்டம் காரணமாக குஜராத்துக்கு தஞ்சம் கோரி வந்த பார்சிகளுக்கு புகலிடம் தரப்பட்டது. நீண்ட நெடுங் காலத்துக்கு முன்னரே இந்தியா பெற்றிருந்த நீதியுணர்வை இது பிரதிபலித்தது. நாட்டு விடுதலைக்குப் பின்னர்,

### குவியும் அகதிகள்

பாக்கிஸ்தானிலிருந்து இந்துக்கள், சீக்கியர்கள்; சீனத்திலிருந்து திபெத்தியர்கள்; கிழக்கு பாகிஸ்தானிலிருந்து வங்காளிகள்; இலங்கையிலிருந்து தமிழர்கள், வங்காள தேசத்திலிருந்து சக்மாக்கள்; பூடானிலிருந்து நேபாளிகள்; ஆப்கனிஸ்தான், மியன்மார் நாடுகளிலிருந்து அந்நாடுகளின் அரசியல் ஒடுக்குமுறைக்கு ஆளானோர் என இந்தியாவில் அகதிகளாக வந்து குவிந்தவண்ணம் இருக்கின்றனர். இப்படிப்பட்ட அகதிகளின் எண்ணிக்கை 25 மிலியன், இலங்கை, சிங்கப்பூர், பூடான், மாலத்தீவு ஆகிய நாடுகளின் ஒட்டு மொத்த எண்ணிக்கையைக் காட்டிலும் இது அதிகம்.

பதினெட்டு மிலியன் மக்கள் தொகையை மட்டுமே கொண்ட மிகச்சிறிய நாடான இலங்கை, உலகின் மிகப் பெரிய எண்ணிக்கையில் அகதிகளையும் புலம் பெயர்ந்தோரையும் பிரசவிக்கும் நாடாகத் திகழ்கிறது. கிட்டத்தட்ட மூன்றரை லட்சம் பேர் இலங்கையிலிருந்து வெளியேறி, அயல்நாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர். அந்நாட்டின் வடக்கிலும்-கிழக்கிலும் வாழ்ந்தவர்களில் பாதிப்பேர் நாட்டுக்கு உள்ளேயே புலம் பெயர்ந்துள்ளனர். தமிழர்கள் மட்டுமின்றி, முஸ்லீம்களும், ஏன் சிங்களவர்கள் கூட இதில் உண்டு.

### பாலியல் வன்முறை

தமிழ் நாட்டுக்கு அகதிகளின் வருகையை, தொடர்ந்து வரும் இன வெறித் தாக்குதல்களின் பின்னணியிலிருந்துதான் பார்க்க வேண்டும் புது தில்லியின் இலங்கைக் கொள்கை-மாந்தநேய அடிப்படையிலும், நாட்டின் பாதுகாப்புக் காரணங்களையும் முன்னிறுத்தித்தான் இருந்து வந்துள்ளது. புவியியல் ரீதியான அணுக்கமும், இனப்பற்றும்தான் தமிழ்நாட்டை நோக்கி அகதிகள் கவரப் பட்டதற்குக் காரணம். தமிழ் நாட்டில் தஞ்சம் புகுவது மலர்ப்பாதையாக இருக்காது. என்றாலும்-உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை என்ற கருத்து தான் இலங்கைத் தமிழர்களிடம் மேலோங்கி இருந்தது. நள்ளிரவில் கதவைத் தட்டுவது தமிழ்நாட்டில் இல்லாத ஒன்று. மேலும், பாலியல் வன்முறை அச்சமின்றி, இலங்கைத் தமிழ்ப் பெண்டுகள் தாராளமாக நடமாட முடியும்.

இலங்கைத் தமிழர்கள் அரசியல் விழிப்புணர்ச்சி மிக்கவர்கள்; அகதிகள் என்ற குட்டையில், போராளிகள் என்ற மீன்கள் செழித்து வளர முடியும்.

### புலிகளின் பாடிவீடு

இலங்கைத் தமிழர்களின் போராட்டத்துக்கு ஆதரவளிப்பதில் தமிழகத்தின் இருபெரும் திராவிடக் கட்சிகளுக்கிடையே நிலவும் போட்டியும்; தமிழ்ப் போராளிகளை ஆயுதபாணிகளாக்கும் புது தில்லியின் கொள்கையும் (முதல் ஈழப்போரின் போது), தமிழ்நாட்டை விடுதலைப்புலிகளின் சரணாலயமாகவும்-பாடி வீடாகவும் மாற்றியது.

இந்த நிலை 1991 மே மாதம் ராசீவ் படுகொலை செய்யப்படும் வரை நீடித்தது. பின்னர் இலங்கைத் தமிழ் அகதிகள் வேண்டாத விருந்தாளிகளாகிப் போனார்கள். ஒரே இரவுக்குள் அனைத்தும் தலைகீழாக மாறிவிட்டது.

அன்றைய அ.தி.மு.க. அரசு, பாதுகாப்புக் காரணங்களை முன்னிறுத்தி கொஞ்சம் அதீதமாகவே நடவடிக்கைகளை மேற்கொண்டது அகதிகளுக்கு உயர்கல்வி வசதி மறுக்கப்பட்டது; முகாம்களில் நடமாட்டம் கண்காணிப்புக்கு ஆளாகியது அகதிகளை தாய் நாட்டுக்குத் திருப்பியனுப்பும் பணி 1992 சனவரியில் துவங்கியது. இந்தியா அகதிகளை நாடு திரும்ப வற்புறுத்துகிறது என்ற விமரிசனத்தை அடுத்து அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஆணையம் அனுமதிக்கப்பட்டு அகதிகள் இதனால் முன்வந்து தாமாகவே நாடு திரும்புவது உறுதி செய்யப்பட்டது. இந்தியாவின் பெருமையும் வெளிப்படைத் தன்மையும் உலகம்முழுவதும் உணர்த்தப்பட்டது. அதே நேரம், மனிதஉரிமை அமைப்புகளின் கடும் கண்டனத்துக்கும் புது தில்லி ஆளாகியது.

### மூவகை அகதிகள்

தமிழ்நாட்டில் தஞ்சம் புகுந்துள்ள அகதிகள் மூவகைப்படுவர்.

1. முகாம்களில் வாழும் அகதிகள் 1997 சூலை முதலாம் தேதிப்படி முகாம் வாழ் அகதிகளின் எண்ணிக்கை-63,208 பேர்.

2. வசதி படைத்தஅகதிகள் முகாம்களுக்கு வெளியே தம்மைப் பராமரித்துக் கொள்ளக்கூடிய வசதி படைத்தவர்கள்; இவர்களதுஎண்ணிக்கை கிட்டத்தட்ட 25,000. ராசீவ் படுகொலையைஅடுத்து இவர்களனைவரும் அருகிலுள்ள காவல் நிலையத்தில் தங்களைப் பதிவுசெய்து கொள்ளும்படி பணிக்கப்பட்டனர். பதிவு செய்யாதவர்களைக் காவல் துறையினர் கைது செய்யத் துவங்கியது. இதனையடுத்து 'அந்நியர் சட்ட'த்தின் கீழ் 1800 பேர் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

3. போராளிக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என இனம் காணப்பட்டோர், 1992இல் 1629 பேர் இப்படிப்பட்ட சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டிருந்தனர். எனினும் குறிப்பிட்ட குற்றச்சாட்டின்றி சிறப்பு முகாமுக்கு வந்தவர்களை அரசு விடுவித்து, நாடு திரும்பவும் அனுமதித்தது. இப்போது 270 போராளிகள் சிறப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர்.

### இந்தியாவின் அரவணைப்பு

வறிய நாட்டிலிருந்து மிகவும் வறிய நாட்டுக்கு அகதிகள் வந்துள்ளனர். குடும்பத்தினரின் எண்ணிக்கைக்கேற்ப உதவு தொகைகளை வழங்குகிறது. மானிய விலையில் அரிசி, மண்ணெண்ணெய், சருக்கரை, பருப்பு போன்றவை வழங்கப்படுகின்றன. வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளும் வசதியும் வழங்கப்படுகிறது. (சக்மா அகதிகளுக்கு இந்த உரிமை வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்க அம்சம்) அகதிகளுக்கு வேண்டிய வசதிகள் அட்டியின்றி வழங்கப்படுகின்றன என்பதையே இந்த விவரங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

ஆட்சி அதிகாரத்தின் கீழ் மட்டங்களிலுள்ளோர் அகதிகளின் ஆவலாதிகளை உணர்ந்து, புரிந்துகொண்டு செயல்பட்டால், முகாம்களில் வாழ்க்கைத்தரத்தினை மேலும் உயர்த்த முடியும்; அதேநேரம் மனிதஉரிமை அமைப்புகளின் புகார்களையும் பரிசீலித்து நிலைமைகளைத் திருத்த வேண்டிய அவசியமும் இருக்கவே செய்கின்றது. 1991-ம் ஆண்டு வெளியான அகதிகளுக்கான அமெரிக்கக் குழு வெளியிட்ட அறிக்கையில், ''ஆசியாவின் மற்றெந்த அகதிக் குழுக்களுக்கும் போலவே தமிழ் அகதிகளையும் இந்தியா வரவேற்றது''எனக்குறிப்பிடப் பட்டுள்ளது.

### திமுக அரசின் மனித நேயம்

அகதிகள் பிரச்சினையை மனிதநேயக் கண்ணோட்டத்துடன் தற்போதைய திமுக அரசு அணுகி வருகின்றது.

உயர் கல்விக்கு இருந்த தடை 1996-97 கல்வியாண்டு முதல் நீக்கிவிட்டது. அகதிகள் நடமாட்டம் தொடர்பான தேவையற்ற கட்டுப்பாடுகளும் நீங்கிவிட்டன. அகதிகளும் பலவீனப் பிரிவினரில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கும் இலவச வேட்டி-சேலைத் திட்டங்கள் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. மத்திய அரசு உதவித் தொகையுடன் 50 ரூபாயை மாநில அரசு சேர்த்துக் கொடுக்கிறது

### பாதுகாப்பு பிரச்சினை

இலங்கையில் இனப் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காணப்படாவிட்டால், அகதிகள் பிரச்சினையும், இந்தியாவின் பாதுகாப்பும் தொடர்ந்து கவலை தருபவையாகவே இருக்கும்.

சிறிய ஆயுதந்தாங்கிக் குழு என்ற நிலையிலிருந்து, பன்னாட்டு அமைப்பாக விடுதலைப்புலிகள் பேருருவெடுத்துள்ளனர் முதலீடு, நியமனம்-பயிற்சி, பிரச்சாரம், நிதி, ஆயுதக் கொள்வனவு, தகவல் தொடர்பு, புலனாய்வுத் திறன், போக்குவரத்து என வலுவான வலைப் பின்னல் அமைப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளனர். பார்க்கப் போனால், இலங்கை அரசின் தூதுவரகங்களையும், துணைத் தூதரங்களையும் சேர்த்துப் பார்த்தால் கூட, விடுதலைப் புலிகளின் தகவல் மையங்களின் வலு சற்றுத் தூக்கலாகவே இருக்கிறது.

### முந்திய தவறுகள்

தமிழ்நாடும், இந்திய அரசும் தமது பாதுகாப்பு எந்திரத்தை நவீனப்படுத்தி-புதுப்பித்துக் கொள்ளவேண்டும்; தரையிலும் இது உடன்டியாக நடைபெற வேண்டும். கடந்த ஆண்டுகளில் மிக மோசமான தவறுகள்-குறைபாடுகள்

(8-ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்

www.padippakam.com



# தமிழர் தம் தொகையைப் பெருக்காததே தமிழர் தொல்லைகளுக்கு அடிப்படை!

## சிங்கை-மலேசியத் தமிழர்களை எடுத்துக்காட்டி இலங்கைத் தமிழர் நிலை பற்றி நாவலர் பேச்சு

### தந்தை செல்வா நூற்றாண்டு விழா உரையின் தொடர்ச்சி

நானே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சொன்னபடி தமிழக அரசின் சார்பாக மட்டும் பொது மக்கள் தந்தது நாலே முக்கால் கோடியாக இருந்தாலும் அரசின் சார்பாக இன்னும், நான்கு கோடி தர வேண்டும் என்று அதற்கு மத்திய அரசுடைய அனுமதியும் பெற்று செக்கிலே கையெழுத்துப் போட்டுக் கொடுத்தேன். அந்த அளவுக்கு அன்று தமிழகத்தில்-இந்தியாவில் ஆதரவு இருந்தது. அந்தளவுக்கு மக்களுடைய ஆதரவும் கிடைத்தது. சரியாகவோ தப்பாகவோ பிரச்சினைகள்—நிலைமைகள் மாறி தமிழர்களில் ஒருத்தனுக்கு ஒருத்தன் கட்டுப்படாமல் மாறி, மடையன் எல்லாம் அனேகம் பேர் ஒண்ணாயிடுவான். புத்திசாலியெல்லாம் சீக்கிரம் ஒண்ணாக மாட்டான். அந்த தகராறுல என்ன ஆச்சு என்றால் சிங்களவன் நல்ல புத்திசாலி என்று நினைக்காதீர்கள். வரலாறு முழுக்கப் பார்த்தீர்கள் என்றால் இலங்கையை பல்லாயிரமாண்டு காலம் ஆண்டவர்கள், இலங்கையினுடைய பொருளாதாரத்தை வளர்த்தவர்கள் இலங்கையினுடைய நன்மைகளை எல்லாம் வளர்த்தவர்கள் தமிழர்கள்தான்.

#### எல்லாம் தமிழர் மயம்

கிட்டத்தட்ட நூற்றுக்கு 90 ஜட்சுகள் யாழ்ப்பாணத்தான் தான். செகரட்டேரியேட்டில் இருந்தவர்களில் முக்கால்வாசி யாழ்ப்பாணத்துத் தமிழர்கள்தான். அனேகமாக டிஸ்டிரிக்கலைட்டர், டிப்டிக் கலைட்டர் எல்லாம் கணக்கெடுத்துப்பார்த்தீர்கள் என்றால் பெரும்பாலும் யாழ்ப்பாணத்துத் தமிழன் தான் இருந்தான். பெரிய பெரிய வழக்கறிஞர்கள் எல்லாமே யாழ்ப்பாணத்தான் தான். ஜி ஜி. பொன்னம்பலம், செல்வநாயகம் போன்ற பெரிய பெரிய வழக்கறிஞர்கள் எல்லாம் நம்மவர்தான்.

ஆகவே ஈழநாட்டில் சொல்வார்கள் தோட்டத் தொழில் காடு கரம்புகள் எல்லாம் தேயிலைத் தோட்டங்களாக மாற்றி அதை காப்பித் தோட்டங்களாக மாற்றிக் கொண்ட பொழுதும் இங்கிருந்து நம்மவனைத்தான் அழைத்துப் போனார்கள் கூலியாக. அதற்கு கண்காணியெல்லாம் இருந்தான். கொண்டுபோய் அங்கு சேர்த்தான். அவர்களை வைத்துக் கொண்டு தோட்டத்தொழிலைச் செழிக்க வைத்தான். அங்கு போய் ஏன் சிங்களவனை அழைக்கவில்லை என்று வெள்ளைக்காரனைக் கேட்ட பொழுது அவனைப்போன்று சோம்பேறி எவனும் உலகத்தில் இருக்க மாட்டான் என்று பதில் சொன்னான்.

#### இலங்கை தமிழ்நாடாக இருந்திருக்கும்

ஆக அறிவைப்பயன்படுத்தியவன் தமிழன் தான். என்ன நம்மவன் தவறு பண்ணிட்டான் என்றால், போனவன்களிலே சில பேர்தான் அங்கு தங்கினான். நம்ம தமிழனிலே இங்கே கல்யாணம் பண்ணி, பொண்டாட்டியை விட்டுபுட்டு அவன் மட்டும் போயிட்டு 6 மாதத்திற்கோ 7 மாதத்திற்கோ ஒருவாட்டி வந்து பார்த்துப்புட்டு அவன் மட்டும் திரும்பிவிட்டான். போனவன் பொண்டாட்டியையும் சேர்த்து அழைச்சிட்டு போயிருந்தான் என்றால் பெத்துத் தள்ளுற பத்துப் பதினைந்தையும் அங்கேயே பெத்து தள்ளியிருப்பான். அங்கேயே பெற்றுத் தள்ளி நம்முடைய எண்ணிக்கையைப் பெருக்கியிருந்தான் என்றால் இன்றைக்கு தமிழ் நாடாகவே இருந்திருக்கும் இலங்கை நாடு.

இதைத்தான்-இதே குறையத்தான் மலேசியாவிலே இருப்பவனும் செய்தான். சிங்கப்பூரிலே உள்ளவனும் செய்தான். ஏன் சொல்ல வர்றேன்னா முதல் முதல் சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் குடியேறியவர்கள் தமிழர்கள் தான். தமிழ் வியாபாரிகள் தான் போனார்கள். ஒரு நூறு வருசத்திற்கு முன்ன சிங்கப்பூரில் உள்ளகணக்கைஎடுத்து பார்த்தேன். நூற்றுக்கு எழுபது பேர் சிங்கப்பூரின் குடிகள் தமிழர்கள்தான். சீனன் அதுக்கு அப்புறம்தான் போன நூற்றாண்டிலே வந்தான். அவன் செய்த தந்திரம் என்னவென்றால் அவன் மட்டும் வரவில்லை; குடும்பத்தையும் கூடவே அழைச்சுகிட்டு வந்திட்டான். அவன் திரும்பிச் சீனாவுக்கு போகவில்லை. செய்ய வேண்டிய காரியத்தையெல்லாம் அங்கேயே செய்தான்.

#### பாலை நிலத்தில் அரண்மனை

எட்டும்எட்டும் பதினாறு என்றான். எட்டெட்டு அறுபத்து நான்கு ஆச்சு. தன்னுடைய தொகையைப் பெருக்கிபுட்டான். நம்மவன் இங்கே வீட்டை கட்டிபுட்டு, நம்ம செட்டியார்மார் எல்லாம் அங்கே போயிட்டு 6 மாதத்திற்கு ஒரு முறை போயிட்டு, அங்கு சம்பாதித்த காசைக் கொண்டு வந்து ஐந்து ரூபா வாடகைக்கும் குடியேறாத இடத்திலே அரண்மனையைக் கட்டிப்புட்டான்.

எங்கே? தண்ணியே இல்லாத இடமா பார்த்து! அவன் எல்லாம் இந்த காவேரி யாற்றங்கரையிலே கட்டக் கூடாது? திருச்சியைத் தேர்ந்தெடுக்கக்கூடாது? தஞ்சாவூரைத் தேர்ந்தெடுக்கக் கூடாது? கானாடு காத்தானை தேர்ந்தெடுத்தான் என்றால் அங்கு தண்ணியே இல்லை. தண்ணீர் இல்லாத இடத்திலே அரண்மனை அரண்மனையாகக்கட்டி இப்போது அந்த செட்டியார்எல்லாம்என்னசெய்கிறார்கள் என்றால், நிலைக் கதவு எல்லாம் தேக்கு மரம். பர்மா தேக்கு. அதை கழட்டி வித்துகிட்டு இருக்கிறான். செட்டியார் தலைவர் கட்டிய சத்திரம் திருவண்ணாமலையிலே இருக்கு. ஒரு பெரிய சத்திரம் இருக்கிறது அதிலே ஒருவர் உட்கார்ந்து கொண்டு இருந்தார். நண்பர்கிட்டே நான் கேட்டேன் யார் என்று. அவர் சொன்னார் இவர் பல கோடி சொத்துக்கு அதிபதியாக இருந்தாரு. எல்லாம் பொயிட்டுது. அவர் கட்டின சத்திரத்திலே இப்போது அவர் உட்கார்ந்துகிட்டு சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறார் என்றார்.

#### நூற்றாண்டுத் தவறுகள்

அந்தளவுக்கு நம்மவன் செய்கின்ற நூற்றாண்டுத் தவறு இது. பல நூற்றாண்டுகளாக செய்த தவறு இது. இல்லாட்டி போனால் நம்மவன் போனவன் அத்தனை பேரும் இளைச்சவன் இல்லே. எல்லாம் எட்டு ஏழு போடுறவன்தான். உலகிலே அதிகமா குட்டி போடுறவன் சீனாக்காரன்னு பெயரு. அவன் எவ்வளவு போட்டனுமோ அவ்வளவும் போட்டு சிங்கப்பூரையும் கைப்பற்றி விட்டான். இன்னைக்கு மலேசியாவில் கூட மொத்த ஜனத்தொகையில் சீனன்தான் முதலாவது. இரண்டாவது மலேசியக்காரன். மூணாவது தமிழன். மலேசியாகாரன் வாழனும் என்றால் இந்தியத் தமிழனுடைய ஆதரவு இருந்தால்தான் சீனனை அடிக்க முடியும். ஆகையினாலே தான் பர்மாகாரன் மாதிரி நம்மவனை விரட்டி அடிக்காமல் நம்ம தமிழனை காப்பாற்றிக் கிட்டு இருக்கிறான். இல்லாட்டி பர்மாக்காரன் மாதிரி விரட்டி அடிச்சு இருப்பான். எதற்கு சொல்ல வாரன்னா, போன இடத்திலெல்லாம் விரைவாக நம்மவன் பெருகியிருந்தான் என்றால், இந்நிலை வந்திருக்காது. ஈழத் தமிழர்கள் பரம்பரையாக வாழ்ந்த தமிழர்கள், முஸ்லிம் தமிழர்கள் மலையகத் தமிழர்கள் என்று கணக்கு எடுத்து போட்டேன் என்றால் மூணிலே ஒரு பகுதி தான் இன்று இருக்கிறார்கள். மூணிலே இரண்டு பகுதி சிங்களவர்கள் ஆதிக்க அதிகாரத் தன்மையுடைய நிலையிலே இருக்கிறார்கள் முன்னால் பேசிய அரு கோபாலன் சொன்னது மாதிரி இலங்கை முன்பு தமிழ் நாடாக இருந்த பகுதிதான். தமிழர் வாழ்ந்த பகுதிதான். தமிழன் ஆண்ட பகுதிதான்.

#### சங்கமேறிய ஈழப்புலவர்கள்

முதற் சங்கம், இடைச் சங்கம் இருந்த பகுதி தான். மூன்றாவது சங்கம் தான் மதுரைக்கு வந்தது. முன்பிருந்த லெமோரியா கண்டம், குமரிக்கண்டம் என்று சொல்கிற பகுதி முழுக்க முழுக்க தமிழர் இருந்த பகுதிதான். தமிழ் வழங்கிய இடம் தான். தமிழ் வளர்ந்த இடம் தான். தமிழ் அரசர்கள் வாழ்ந்த இடம், வளர்ந்த இடம் தான். பஃறுளி ஆற்றுடன் பன்மலை அடுக்கத்து குமரிக் கோடும் கொடுங்கடல் கொள்ள என்று பாடியபாட்டு எழுந்த பொழுது குமரிமலை என்று ஒன்று இருந்திருக்கு. குமரி முனை என்று ஒன்று இருந்திருக்கு. குமரி ஆறு என்று ஒன்று இருந்திருக்கு. கடல் கோளால் மலை போச்சு. ஆறு போச்சு. முனை நின்னுட்டுது. இரண்டு கடல் கோள் ஏற்பட்டு போனதிற்கு அப்புறம் மிச்சம் தங்கினது. இந்த ஈழம் இந்த இலங்கை. ஆனா அங்குதமிழ்தான்வழங்கியிருக்கிறார்கள். தமிழர்தான் வாழ்ந்திருக்கிறார்கள்.

ஈழத்துப் பூதனார் என்று சங்ககாலப் புலவர் கூட இருந்திருக்கிறார். எத்தனையோ ஈழத்துப் புலவர் பெயர் எல்லாம் தமிழிலே இருந்து இருக்கு. உள்ளபடி இலங்கையைத் தமிழன் தான் ஆண்டான். வரலாற்றுப்படி பார்த்தால் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிலே வடநாட்டிலே இருந்து விரட்டி அடிக்கப்பட்ட ஒரு அரசனுடைய மகன் விஜயன் என்கிறவன், 700 ரவுடிகளை அழைத்துக் கொண்டு தான் இலங்கைக்கு வந்தான். இவன் இங்கு இருந்தான் என்றால் அமைதி இருக்காது இவன் எங்கேயாவது போய்த் தொலையட்டு என்று சொல்லி அந்த அரசன் தாங்க முடியாத வேதனையுடன் விஜயவையும் 00 கொடுமை பண்ணுகிறவர்களையும் ஒரு கப்பலில் ஏற்றி எங்கேயாவது செல்லுங்கடா என்று சொல்லிப்புட்டான். அவன் கடைசியிலே எங்கே இறங்கினான் என்றால் இலங்கையில் புத்தளம் என்று ஒருபகுதி இருக்கிறதல்லவா? அந்தப் புத்தளத்தில்தான் இறங்கினான்.

#### ரவுடி வென்ற ராஜ்ஜியம்

ராபர்ட் கிளைவ் எனும் ரவுடிதான் இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியம் சமைக்கிறதுக்குக் காரணமாக இருந்தான். ராபர்ட் கிளைவ் என்றால் முரடனில் ஒருத்தன். அவன் திமிர் பிடித்தவன். தொல்லை கொடுத்தவன். அவன் ஆங்கில நாட்டிலே இருந்தால் அரசுக்குத் தலையிடி கொடுப்பான் என்றுதான் அவனை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் அவனோ, தன் ரவுடித்தனத்தைப் பயன்படுத்தியே இந்தியாவைப் பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் பகுதியாக்கி விட்டான். அப்படித்தான் வடக்கே லாலா தேசத்திலிருந்து துரத்தப்பட்ட ரவுடி விஜயன் இலங்கையில் சிங்கள சகாப்தம் ஏற்படுவதற்கு அடிகோலி விட்டான்.

(நாவலரின் பேச்சு அடுத்தடுத்த இதழ்களிலும் தொடர்ந்து வெளிவரும்.)

## நம் நாடு

குற்ற மற்ற கொள்கை—தம்பி
கொண்ட திந்த நாடு
கற்றவருக்கெல்லாம்-தம்பி
கல்வி தந்த நாடு
வெற்றி மறவர்கள்-தம்பி
வேல் மறவர் நாடு
மற்றவரும் வாழத்-தம்பி
வழி வகுத்த நாடு!

பாவேந்தர்
—பாரதிதாசன்


## "ஈழ சுதந்திரன்" மாத இதழ் சந்தா விபரம்

ஓராண்டு சந்தா இந்தியாவில் ரூ. 30-00

வெளிநாடுகளில் அமெரிக்க டொலர் 10

அல்லது பிரிட்டிஷ் பவுண்ட் 6

ஈழ சுதந்திரனுக்கு வெளிநாடுகளில் சந்தா சேர்த்தனுப்ப முன்வருவோர் தொடர்பு கொள்ளலாம்.

நிர்வாகி
ஈழசுதந்திரன்
14, சேட் காலனி முதல் தெரு
மூன்றாம் மாடி
எழும்பூர், சென்னை—600 008.


படிப்பகம்

www.padippakam.com


# இலங்கை இனப் பிரச்சினையும் இந்தியாவின் பங்களிப்பும்

## 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேடு கட்டுரை

சரியாகப் பத்தாண்டுகளுக்கு முன்பு, விஜித ரோகண விஜயமுனி என்ற இலங்கைக் கடற்படை வீரர், ஒரே இரவுக்குள் அந்நாட்டின கதாநாயகனாகி விட்டார். 1987 சூலை 29-ஆம் தேதி அப்போதைய இந்தியப் பிரதமர் ராசீவும் - இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனரவும் கையெழுத்திட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்துக் கிளம்பிய இந்திய எதிர்ப்புச் சீறலாக—அதன் வெளிப்பாடாக விஜயமுனியின் செய்கை அமைந்தது.

விஜயமுனி தனது துப்பாக்கியின் அடிக்கட்டையால் தாக்கி, ராசீவுக்கு அணிவகுப்பு மரியாதையை அளித்தார். கண்ணிமைக்கும் நேரத்தில் விலகியதால் ராசீவின் தலை தப்பியது; தலைக்கு வந்த பாரத்தைத் தோளில் சுமந்தார்.

இலங்கை அரசின் துவக்கக் கட்டத் தயக்கத்துக்குப் பின்னர், விஜயமுனி சிறையிலடைக்கப்பட்டார். ராசீவ் தாக்கப்பட்டதில் பெருமிதமடைந்த பலர் பிரியாணிப் பொட்டலங்களைப் பரிசாகத் தந்து, விஜயமுனியின் முதல் சிறை இரவைக் கொண்டாட வைத்தார்கள்.

இது நடந்து பத்தாண்டுகள் கடந்துவிட்டன விஜயமுனி மீது இராணுவ விசாரணை நடத்தப்பட்டு மூன்றாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. தான் செய்தது சரியே என்பது, இன்றைக்கும் விஜயமுனியின் வாதமாக இருக்கிறது.

'எனது நாட்டு உள்விவகாரங்களில் இந்தியா தலையிடுவது என்னைக் கோபமடையச் செய்தது. ஏதாவதொரு வகையில் எனது சினத்தை வெளிப்படுத்த நினைத்தேன். ஏராளமானோர் எனது இந்தக் கருத்தையே கொண்டிருந்தனர்' என்று விஜயமுனி சொல்கிறார்.

கொழும்பு புறநகர்ப் பகுதியில், வீடியோ கடையொன்றை நடத்திவரும் விஜயமுனி 1987 ஒப்பந்தம் இலங்கையை இரண்டாகப் பிளந்திருக்கும் என்றும், ராசீவைத் தாக்கியதற்காக தான் ஒருபோதும் வருத்தப் படவில்லை என்றும் கூறுகின்றார்.

''நான் செய்தது சரிதான் என்பதை நிரூபித்து விட்டேனா இல்லையா? ராசீவ் இலங்கையை குழப்பத்தில் ஆழ்த்தாமலிருந்திருந்தால் அவர் இன்றளவும் உயிரோடிருந்திருக்கக் கூடும்; இன்றும் பிரதமராகக் கூட இருந்திருக்கலாம். தான் உதவி செய்ய முயன்றவர்களாலேயே அவர் கொல்லப்பட்டதுதான் மிச்சம்'' -என்கிறார் இந்த 31-வயதான விஜயமுனி.

சிங்களப்பெரும்பான்மையினர் ஒப்பந்தத்தினைஇந்தியாவின் திணிப்பு என்று நினைக்க, விடுதலைப் புலிகளோ தமது கோரிக்கைகளுக்கு இது உறைபோடக் கூடக் காணாது என்று வெறுக்க ஒருவகையில் விஜயமுனியின் நிலைப்பாடு சரியாகத்தான் போய்விட்டது.

நாடாளுமன்றத்தின் முன் இந்த ஒப்பந்தத்தை வைத்து, தொடர்ந்து 13ம் சட்டச் சீர்திருத்தத்தினைக் கொண்டு வருவதில் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பெரும் பிரச்சினைகளேதும் இல்லை என்றாலும், தென்னிலங்கைச் சிங்களவர்களிடையே கடும் எதிர்ப்பு இருக்கத்தான் செய்தது. இப்போதைய ஆளும்கட்சியான சிறீலங்கா சுதந்திரக் கட்சியும், இந்திய அமைதிப்படைக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை முன்னின்று நடத்தியது.

வடக்கில் விடுதலைப் புலிகள் ஆயுத ஒப்படைப்பு விடயத்தில் பின் வாங்கினார்கள். தொடர்ந்து இந்திய இராணுவம் பல்வேறு இழப்புகளைச் சந்தித்தது. அடுத்து, ராசீவும் மற்ற முக்கியப் பிரமுகர்களும் படுகொலை செய்யப்பட்டனர். இந்தியாவுக்குப் பெரும் பாரமாக அமைந்த இந்த நடவடிக்கை, இந்திய-இலங்கை உறவுகளையும் சீர்குலைத்தது. இலங்கைத் தமிழர்களுக்கு அதிகாரப் பகிர்வு அளித்ததனால், உருப்படியாக எதையும் சாதிக்க முடியவில்லை.

இனப் போர் இன்றளவுக்கும் தொடர்ந்து நீடிக்கிறது. தமிழர்களின் லட்சிய நிறைவேற்றத்துக்கான வாய்ப்புகளும் நீர்த்துப்போயுள்ளன.

இலங்கை அரசியல் சட்ட விவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் என்பவர், 13-வது அரசியல் சட்டத் திருத்தத்தினை ''வெட்கக்கேடானது'' என்றும், ''நம்பிக்கையற்ற நடவடிக்கை'' என்றும் அண்மையில் அறிவித்துள்ளார். அந்த நேரத்தில் எதிர்ப்புத் தெரிவிக்க இயலாத வெளிநாட்டு அழுத்தங்களுக்கு ஏற்றதான பிரதிபலிப்பு'' என்றும் வருணித்துள்ளார்.

இலங்கை அமைப்பின் இதர பிரிவினரும், அவ்வப்போது ஒப்பந்தத்தை ரத்து செய்யவேண்டுமெனக் கோரி வந்துள்ளார். புதிய இந்திய-இலங்கை உடன்பாடு எட்டப்பட வேண்டும் எனவும் குரல் எழுகிறது.

எனினும், மற்றெந்த வெற்று உறுதிமொழிகளைக் காட்டிலும் 13-வது சட்டத்திருத்தம் உருப்படியானது என்பது நிதரிசன உண்மை. இலங்கையின் வரலாற்றில்-பிராந்தியத் தன்னாட்சி தமிழ் மொழிக்கு ஆட்சிமொழி அந்தஸ்து-போன்ற உரிமைகளைத் தமிழர்களுக்குப் பெற்றுத் தந்தது 1987 சூலை ஒப்பந்தமே. வடகிழக்கு இணைப்பு, தமிழர்களின் தாய்நில அங்கீகரிப்பு ஆகியவையும் இந்த ஒப்பந்தத்தினால்தான் சாத்தியமாயின.

பிராந்தியக் கவுன்சில்களுக்கு வகை செய்யும் 13-வது சட்டத் திருத்தத்தினைக் கடுமையாக எதிர்த்த சிங்களக் கட்சிகளே, இச்சட்டத்தின் கீழ் ஏற்பட்ட பிராந்திய கவுன்சில் தேர்தலில் ஆர்வத்துடன் போட்டியிட்டன. வடகிழக்கு தவிர்த்த மற்ற கவுன்சில்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் விஜயமுனியும் போட்டியிட்டு 14வாக்குகளைப் பெற்றார்.

தற்போது இந்தியா, இலங்கை இனப்பிரச்சினையிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு, தொலைவாய் இருந்தாலும், இலங்கைத் தமிழர் தலைவர்களைப் பொறுத்தவரையில், எந்தவிதத் தீர்வுக்கும் வழியில்லை என்றாகிவிடும் நிலையில் இந்தியா தம்மைக் காப்பாற்ற முன்வர வேண்டுமென விழைகின்றனர்.

சந்திரிகா குமாரதுங்கவின் அதிகாரப் பரவல் நடவடிக்கைகள் சட்ட வடிவமும், அரசியல் அங்கீகாரமும் பெறுவதையடுத்து, 13-வது சட்டத் திருத்தம் தானாகவே வழக்கொழிந்து போகும். அதுவரை, தமிழர் தலைவர்களுக்கு 13-வது சட்டத் திருத்தமே சாய்கால்.

தற்போதைய ஆட்சியாளர்களை பதற்றமடையச் செய்யும் வகையில், சிலர் பெருமளவு முன்னோக்கி நடைபோட்டு வருகின்றனர். இலங்கை நாடாளுமன்றத்தின் தனிப் பெரும் தமிழ்க் கட்சியான ஈழ மக்கள் ஜனநாயக முன்னணியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, இரண்டு பிரியாணிகளைத் தயாரிக்கப் போதுமான அரிசியை ''சந்திரிகா குமாரதுங்க அணியமாக வைத்துள்ளார்'' என்று அறிவித்துள்ளார்.

இடைக் காலத் தீர்வாக, 13வது சட்டத்திருத்தத்தினை அமல் நடத்த வேண்டுமென்ற டக்ளசின் கோரிக்கை, அரசவட்டாரங்களில் சந்தேக அலைகளை எழுப்பியுள்ளது. இந்தியாவிலுள்ள சக்திகளின் சார்பில் டக்ளஸ் இந்தக் கோரிக்கையை எழுப்புகிறார் என்பதே அந்த ஐயம்.

இந்திய அரசு, சந்திரிகா குமாரதுங்கவின் புதிய திட்டத்தினை முழுக்க முழுக்க ஆதரிக்கும் என்பதும் நடவாத காரியம் இந்திய-இலங்கை ஒப்பந்தம் போடப்பட்டு பத்தாண்டுகள் கடந்து விட்டசூழ்நிலையில் இந்தியா முழுவதுமாகக் கைகழுவி விட்டது. தமிழர் சமுதாயத்தை இந்தியா வஞ்சித்து விட்டது என்ற குற்றச்சாட்டுக்கும் ஆளாகியது.

''1977-இல் நாங்கள் ஆயுதங்களை விட்டு, அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ள முடிவெடுத்ததற்குக் காரணம், எங்களது அரசியல் அபிலாசைகள் நிறைவேற்றப்படும் என்ற நிலை இருந்ததினால்தான். ஆனால் எமது தமிழ்ச் சமுதாயத்துக்குக் கிட்டியது பெரிய சூனியம்தான்; அந்த உத்தரவாதங்களெல்லாம் இப்போது எங்கே?'' என வினவுகின்றார், ஈராஸ் அமைப்பின் பொதுச் செயலாளர் கே. சுதாகரன். 'இலங்கைச் சிறுபான்மையினரான தமிழர்களைப் பொறுத்தவரை, இந்தியாவுக்குத் தார்மீகப்பொறுப்பு உண்டு' என்றும் இவர் கருதுகிறார்.

உடனடியாக அரசியல் தீர்வு பெறவும் இந்தியாவின் அனுசரணை அவசியமெனவும் தமிழர் தலைவர்கள் எண்ணுகின்றனர்.

புது தில்லியின் ஒப்புதலும் இசைவுமற்ற எந்தத் தீர்வும் அல்லது திட்டமும் குறைப் பிரசவமாகவே முடியும் என்றே இலங்கைத் தமிழர் சமுதாயம் பரவலாகக் கருதுகின்றது. இதற்காகவே, இந்தியாவும் இலங்கையும் 1987 ஒப்பந்தம் குறித்த நமது நிலைப்பாடு குறித்து தெளிவுபடுத்த வேண்டும்.

('இந்தியன் எக்ஸ்பிரஸ்' ஆங்கில நாளேட்டில்மதுரைப் பதிப்பு 29—7—97 அன்று இடம் பெற்ற நிருபமா சுப்பிரமணியம் கட்டுரை. தமிழாக்கம்: கோரா)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

வெளிப்பட்டு, விடுதலைப் புலிகள் சட்டத்தைக் கையில் எடுத்துக்கொள்ள வகை செய்யப்பட்டுவிட்டது அதனால்-

1. 1990சூனில் ஈ பி.ஆர். எல் எப். பத்மநாபா படுகொலை

2. 1991 மே மாதத்தில் ராசீவ் படுகொலை

3. 1993 ஏப்ரலில் புதுக்கோட்டைக்கு அழைத்துச் செல்லப்படும்போது, கிருபாகரன் தப்பியது

4 1993 மே மாதம் ராசீவ் படுகொலையில் முக்கிய சாட்சியான சார்லஸ் நவாஸ் சைதாப்பேட்டை (சென்னை) சிறப்பு முகாமிலிருந்து தப்பியது.

5. 1995 ஆகஸ்டில் வேலூர் திப்புமகால் சிறப்பு முகாமிலிருந்தும், சென்னை மத்திய சிறையிலிருந்தும் விடுதலைப் புலிகள் தப்பிச் சென்றது,

எனஇந்தப் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது. சென்னைக்கோ அல்லது புது தில்லிக்கோ இவை எந்த விதத்திலும் பெருமை சேர்ப்பவை அல்ல.

### இராசீவின் இழப்பு

அந்தக் கொடூரச் செயல் நிகழ்ந்தேறிய அன்று இரவு ராசீவை வாழ்த்த வந்த பெண்களனைவரையும் மகளிர் காவலர்கள் வெளியேற்றி இருந்தால், ராசீவை, அந்த மாபெரும் தலைவனை அகாலத்தில் நாம் இழந்திருக்க மாட்டோம்.

வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள

1. ராபர்ட் பியாஸ்
2. ஜெயகுமார்
3. சாந்தி (ஜெயகுமார் மனைவி)
4. விஜயன்
5. செல்வலட்சுமி (விஜயன் மனைவி)
6. பாஸ்கரன் (விஜயனின் மாமனார்)

ஆகிய அறுவரும் அகதிகளாக தம்மைப் பதிவு செய்து கொண்டவர்களே. மோசமான சூழ்நிலைகளில்தான் நமது பாதுகாப்பு அம்சங்களை நாம் எளிதாகப் புறக்கணித்து விடுகிறோம்.

(இப்போது மீண்டும் கட்டுரையின் முதல் பந்தியிலிருந்து படிக்கவும்.

'தி இந்து' ஆங்கில நாளேட்டின் மதுரைப் பதிப்பு 28—7—97. கட்டுரையாசிரியர்: வி. சூரியநாராயணா. தமிழில்: கோரா.

## வெறுப்பை விடு!

அறிவே துணையென்று
துணிந்து நடைபோடு!
ஒற்றுமைப் பலங்கொடு
உரிமைக்குப் போராடு!
வெறுப்பை விட்டிடு!
விரக்தியைத் துறந்திடு!
பொறுப்பை உணர்ந்திடு
பொதுநலம் பேணிடு!
வெற்றி கிட்டிடும் தமிழா!
வேதனை ஓடிடும் உடியோய்!

கவிசுரபி
சந்திரசேகரன்

படிப்பகம்

www.padippakam.com

# எதார்த்தங்கள்

## (ஒரு நடைச்சித்திரம்)

-தர்மஜா-

(சென்ற இதழ் தொடர்ச்சி)

ராமு: தம்பி! தம்பி! வெளிலை என்ன செய்யிறாய் இங்கே வா தம்பி.

லட்சுமி: இது நாள்வரை ஆரிட்டையும் கடமைப் படாமை வாழ்ந்திட்டம். தன்ரை காலிலை நிண்டுகாட்டினாத்தான் மற்றவைக்கும் உதவ மனம் வரும். ஏதோ ஒரு நினைவிலைதான் மாமாமார் சித்தப்பாமார் எல்லாரும் இருக்கினம் போலை,எதுக்கும் பிள்ளை நீ நல்லாப் படிச்சுக் காட்டிரு. நீ எடுக்கிற மாக்ஸ் சிலைதான் என்ன செய்வினம் எண்டு தெரியும்.

ராமு: நான் சைக்கிள் வாங்கித்தாறன். ரியூசனிலை ஒழுங்காப் படி.

(இரவு ராமுவும் லட்சுமியும் உறங்க வெகு நேரம் பிடித்தது. ராமுவுக்கு வேலை போனது மிகுந்த சிந்தனையை கொடுத்தது. தனது கணவரது நிலை அறிந்து லட்சுமி ஆறுதல் கூறினாள்.)

லட்சுமி: என்னப்பா மனம் சோர்ந்து போனீங்களோ! இப்ப என்ன அரசாங்க உத்தியோகமே! அல்லாட்டி பொய் களவு செய்தனீங்களோ இந்த மடம் இல்லாட்டி சந்தை மடம் இல்லமலா போகும்? எனக்கும் ஒபரிலை தையல் ரீச்சர் வேலை கிடைக்கும் எண்டு நினைக்கிறன். ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ. சுவர் இருந்தாத்தான் சித்திரம் எழுதலாம், சுந்தரம் அண்ணைக்கு பசாரிலை நல்ல செல்வாக்கிருக்கல்லேஅவரிண்டைக்கேட்டா எப்படியும் எங்களுக்கு உதவுவார், திறமைக்கெண்டு மதிப்பில்லாமலா போகும்? காலேல்லை எல்லாத்தையும் பார்த்துக் கொள்ளலாம். நிம்மதியாய் தேவாரத்தைப் படிச்சுக் கொண்டு படுங்கோ.

ராமு: அப்பனே முருகய்யா! கதிர் காமக்கந்தா! எல்லாம் உன் அருள்தானய்யா (படுக்கையை உதறிப்போட்டு படுத்தார்.)

(லட்சுமி விடிஞ்சதும் விடியாததாய் சுந்தரம் அண்ணனிடம் போய் கேட்டதற்கிணங்க ஒரு கிழமையில் அவர் ஒரு வேலை ஒழுங்கு செய்து கொடுத்துவிட்டார். நாட்கள் கடந்தன. இயல்பான நீரோட்டத்தின் திசையில் வாழ்க்கை நகர்ந்து கொண்டிருந்தது. சுமைகளை தாங்கும் சக்தி உள்ளவர்கள் தாங்களே தாங்கினர். கூட்டாகக் குடியிருக்கும் பாங்கினால் ஒருவர் பாரத்தை மற்றவர்மேல் சுமத்தி ஆறுதலும் அடைந்து கொண்டனர்.

விஜியின் சுமைகளில் பாதியை லட்சுமியே தாங்கி வந்தாலும் தாயன்பில்லாத பையனுக்கு தீராத வலிப்பு வியாதி வந்து ஒட்டிக் கொண்டது. லட்சுமிக்கு பெரும் கவலை. கெட்டிக்காரனுக்கு இப்படி வந்ததே)

தீபன்: அம்மா! நித்திரையாய் வருகுதம்மா இராவிலை ஒரேயடியாய் இருந்து படிக்க முடியேல்லையம்மா! (அங்கலாய்த்தான்.)

லட்சுமி: இரு தம்பி குளிர்ந்த தண்ணிலை காலை வச்சா நித்திரை போயிடும் எண்டுவினம். நான் கொஞ்சம் தண்ணி கொண்டுவாறன். கோப்பி குடிச்சாலும் நித்திரை வராது. இந்தா இதைக்குடி.

தீபன்: நாளைக்கு தமிழ் சோதினையம்மா வேற பாட்டும் படிக்க வேணும் அதை முடிச்சிட்டு நான் கொஞ்சம் சாய்ப்போறன் நீங்கள் தமிழை வாசியுங்கோம்மா நான் கேட்டுக் கொண்டே கிரகிச்சுக் கொள்ளிறன்.

(பிள்ளையின் படிப்புச் சுமையைக் குறைப்பதற்கு தன்னாலான முயற்சிகள் அத்தனையையும் லட்சுமி மேற்கொண்டாள். அவளின் பெண் பிள்ளை தீபா மிகவும் சுட்டி. விளையாட்டு விளையாட்டுத்தான் படிப்பும் படிப்புத்தான். அவள் 7ம் வகுப்புப் படித்துக் கொண்டிருப்பதால் லட்சுமியின் கவனம் பூராவும் தீபனிலேயே இருந்தது. அவனுக்கு ஏற்ற நல்ல உணவுகளைச் செய்து கொடுப்பதிலிருந்து தானும் அவனுடன் சேர்ந்து படிப்பது வரையில் உதவினாள். ஒரு நாள் அதிகாலையில் வேலைக்கு போன ராமுவை ஆட்டோவில் இருவர் அழைத்து வந்தனர்.)

லட்சுமி: என்னப்பா நடந்தது? என்ன சொல்லுங்கோ! (அவர் சைகையாய்ப் பேசினார்.)

(வலது கை காலை அசைக்க முடியவில்லையென்றும் சைகையில் தெரிவித்தார்.)

லட்சுமி: ஐயோ கடவுளே இதென்ன சோதனை! வாங்கோ ஆஸ்பத்திரிக்குப் போகலாம். காசெடுத்துக் கொண்டு வாறன்.

(ஓடிச் சென்று பணம் கொண்டு வந்து கணவரை அழைத்துச் செல்கின்றாள்.)

லட்சுமி: டாக்டர் இவருக்கென்னவெண்டு ஒருக்காப் பாருங்கோ! திடீரென வேலைக்குப் போனவருக்கு இப்படியாகி விட்டது.

டாக்டர்: நான் கவனிக்கும் போது சத்தம் போடக் கூடாது. பயப்பட வேண்டாம்.

லட்சுமி: என்ரை பிள்ளையண்டை சோதினை நேரத்திலை இப்பிடி வந்திட்டுதே நான் என்ன செய்வன்? முருகா நீதான் காப்பாத்த வேணும். டாக்டர் காலைக் கையை அசைக்க முடியுமே? சுகமாய் வந்திடுமே? சொல்லுங்கோ (பதறினாள்.)

டாக்டர்: ஒன்றுக்கும் படப்பட வேண்டாம். மருந்தைக் கவனமாகக் குடுங்க. கொஞ்சம் நாளாகும். ஆனால் நான் மாற்றித் தருவேன். யோசிக்க வேண்டாம். வார்டிலை நிறுத்திடுங்க...

(லட்சுமி புருசனை வார்டில் விட்டுவிட்டு வீட்டுக்கு ஓடுகின்றாள்.)

---

## சொர்க்கம்!

சு. சிவா

வாழவந்தான்கோட்டை

எங்கள் போராட்டம்
தாஜ்மஹாலை விடப்
புனிதமானது,
எங்கள் இதயத்தில்
ஈபிள் டவரைவிட
உயர்ந்து நிற்பது அது
மனதில்
மாஸ்கோ பெரியமணிபோல்
ஒலித்துக்கொண்டே இருப்பது
சீனப் பெருஞ்சுவர்போல்
முடிவு தெரியும்வரை
முற்றுப் பெறாதது!
பைசா நகரத்துச்
சாய்ந்த கோபுரம்போல்
தெரிந்தாலும்,
எங்கள் போராட்டம்
எகிப்திய பிரமிடுகள்போல்
என்றும் அழிவில்லாதது!
தனிஈழம் கிடைத்துவிட்டால்
எங்கள்
தாய்நாடுதான் சொர்க்கம்!

---

லட்சுமி: பிள்ளை விஜி! தம்பியும் தங்கச்சியும் வந்ததும் மேலாலை மாமன்ரை வருத்தத்தைச் சொல்லி சாப்பிட்டு ஆஸ்பத்திரிக்கு வரச் சொல்லுமோனை என்ன?

விஜி: நீங்கள் ஒண்டுக்கும் யோசிக்காதேங்கோ. நான் அவையளுக்கும் சாப்பாடு குடுத்திட்டு இரவுச் சாப்பாட்டையும் செய்து கட்டிக் கொண்டு வாறன். நீங்க மாமாவை கவனமாய்ப் பாருங்கோ.

(ராமுவுக்கு நல்ல வைத்தியம் நடந்து சிறிது நடக்கவும் ஆரம்பித்த பின்னரே துண்டு வெட்டி வந்தனர். விஜி தனது வீட்டு வேலைகளுடன் லட்சுமிக்கும் நல்ல உதவி செய்தாள்.)

லட்சுமி: என்ரை பிள்ளை யோசிக்காமல் படிக்கிறதுக்கும் ஒழுங்காப் பள்ளிக்கூடம் போகவும் பார்த்து வைச்சிட்டாயம்மா. விஜி! உன்னை எண்டைக்கும் மறக்கமாட்டன் கொம்மா வந்தவுடனை உன்ரை வேலைக்குத்தான் நான் மினக்கெடுவன். கடவுள் உனக்கு நல்ல வாழ்க்கையை குடுக்கக் வேணும்.

ராமு: லட்சுமி உனக்குப் பாரமாய்ப் போவனெண்டு நான் நினைக்கவேயில்லை. கடவுள் இந்த நேரத்திலை என்னை முடக்கிவிட்டானே? தீபன் நல்லாய்ப் படிச்சவனே. இண்டைக்குச் சோதினையெல்லே? என்ரை கவலையும் அவனுக்குச் சேர்ந்திட்டுது.

லட்சுமி: யாரும் ஆருக்கேன் பாரமாகிறதேப்பா? மனதுக்குள்ளை குப்பையளைப் போலை கவலையளைச் சேர விட்டால் தான் பாரம் வாற துன்பங்களைப் பகிர்ந்து அனுபவிச்சா அந்த தெம்பிலையே எல்லாத் துன்பமும் பஞ்சாப் போயிடும். நாங்கள் ஆருக்கேன் பழி செய்தனாங்களே. போன பிறப்பிலை என்ன செய்தமோ தெரியேல்லை இப்ப அனுபவிக்கிறம். மனதைத் தேற்றிக் கொண்டு நல்லாய்ச் சாப்பிடுங்கோ. எல்லாம் நல்ல சுகமாயிடும்.

(தபால்காரன் தபால் எனச் சத்தமிடவும் லட்சுமி ஓடுகின்றாள். அவுஸ்திரேலியாவிலிருந்து ராமுவின் தம்பி சுதன் கடிதம் வந்துள்ளது.)

ராமு: ஆராற்றை கடிதம்? வெளிநாட்டுக் கடிதம் போலை.

லட்சுமி: அவுஸ்திரேலியாவிலையிருந்த உங்கடை தம்பி சுதன்தான் போட்டிருக்கிறார்.

ராமு: என்னவாம் வாசி.

லட்சுமி: (சந்தோசத்தில்) இங்கை பாருங்கோ அவர் எழுதியிருக்கிறார். தீபன் நல்ல மார்க்ஸ் எடுத்துப் பாஸ் பண்ணினவுடனை றிசல்ட் சீட்டை அனுப்பட்டாம். தான் உங்களைப் பார்க்க வரும் போது அங்கை ஒரு பள்ளிக்கூடத்திலை அட்மிசன் எடுத்துக் கொண்டு வந்து தீபனையும் கூட்டிக் கொண்டு போவாராம். கடவுள் நல்ல வழியைத்தான் விட்டிருக்கிறார். நான் சொன்னனான்தானே ஏதோ ஒரு வாசல் திறக்குமெண்டு.

ராமு: எனக்கும் யானை பலம் வந்தது போலிருக்குதப்பா. முருகன் கைவிடான்.

(நாட்கள் நகருகின்றன. பரீட்சைப் பெறுபேறு பார்ப்பதற்கு தீபன் சென்றிருக்கின்றான். ஒபரிலிருந்து மாவட்டத் தொண்டர் வந்திருக்கின்றார்.)

மா. தொ: இண்டைக்கு தீபனுக்கு றிசல்ட் எல்லே உங்களையும் பாத்து மருத்துவ உதவிக் காசு குடுக்க வந்தனான். இப்ப எப்பிடி நல்லா நடக்க முடியுதே?

ராமு: இப்ப எனக்கு படிப்படியாய் சுகமாகிக் கொண்டு வருகுது. வீட்டிலையே இருக்கிறது தான் கவலை. தீபனுக்கும் அவன்ரை சித்தப்பா அவுஸ்திரேலியாவிலை அட்மிசன் எடுத்துப் படிப்பிக்கப் போகிறாராம். ஏதோ அவனைப் பார்த்து விட்டா அவன் எங்களைக் கவனித்து கொள்ளுவான். நாப்பத்தைஞ்சு வயசிலை என்னை இப்பிடியாக்கீட்டுது. டாக்குத்தர் எல்லாம் சரியாகிப் பழைய நிலைக்கு வருவன் எண்டு தான் சொல்லுறார்.

மா. தொ: இந்தாங்கோ காசு. கையெழுத்து வைப்பீங்களோ அல்லது லட்சுமி அக்காதான் வரவேணுமோ?

ராமு: இல்லையில்லை நான் கொஞ்சம் எழுதுவன். தாங்கோ நான் எழுதிறன். (ஒப்பமிட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்கிறார்) என்னவோ நாட்டிலை நாங்களும் பொது சேவை செய்தனாங்கள்தான் ஆனால் இங்கை அகதியாய் வந்ததும் அவனவன் தன்ரை சோலியை பாத்துக் கொண்டிருந்திட்டான் தந்தை செல்வான்ரை மகனுக்கு தேப்பன்ரை ரத்தம் ஓடுதெல்லெ இப்பிடியொரு கழகத்தைத் துவங்கி நிர்வாகம் செய்யிறண்டாச் சும்மா லேசே. சீமான் பத்து வருசம் தாண்டிக் கொண்டு போகுதெண்டா எத்தினை திறமை வேணும்? என்ன தம்பி நான் சொல்லிறதென்ன பொய்யே!

மா தொ: ஓம் பாருங்கோ எங்களுக்கு வந்த தடைகள் எத்தனையோ தாண்டிற்றம். இனியும் எங்கடை பணி தொடரும். லட்சுமி அக்காட்டைச் சொல்லுங்கோ நான் வாறன். சத்து மா வேலைகளைப் பார்க்க வேணும், வாறன்.

லட்சுமி: இவன் தம்பி தீபனைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறன். இன்னு காணேல்லை.

ராமு: மாவட்டத் தொண்டர் தம்பியும் மருத்துவச் செலவுக்காசு தந்திட்டு தீபனிரை றிசல்ட்டை கேட்டிட்டுப் போறார்.

தீபன்: அப்பா, அம்மா நான் நானூற்றி எண்பத்தெட்டு மார்க் கெடுத்து பாசா கிட்டனப்பா. நூறு ஆசிரியர்கள் சிநேகிதர்கள் எல்லாரும் என்னை விடவேயில்லையப்பா. அதனாலைதான்லேட் (ராமுவுக்கும் லட்சுமிக்கும் கண்ணீர் பெருகுகின்றது. மகனைக் கட்டித் தழுவுகின்றனர்.)

லட்சுமி: (சேலைத் தலைப்பால் கண்ணைத் துடைத்துக் கொண்டே) தம்பீ எங்கடை வயித்திலை பாலை வார்த்திட்டாயப்பா. உன்னைப் பெத்த போதுகூட நான் இப்படிச் சந்தோசப்படேல்லை. சித்தப்பா உன்னை அவுஸ்திரேலியாக்கு கூட்டிக் கொண்டு போய்ப் படிப்பிக்கப் போகிறாராம். பல்லைக்

(10ம் பக்கம் பார்க்க)

# இராமேஸ்வரம் என்று கூறி குருசுப்பாடுவில் இறக்கிவிடப்பட்ட அகதிகள் பட்டபாடு!

வன்னி பிரதேசத்தில் யுத்தநிலை உச்சக் கட்டத்துக்கு வந்ததுமே பல நூற்றுக்கணக்கான மக்கள் அகதிகளாக அயல்நாடான இந்தியாவுக்கு சென்றவர்களும், இன்னும் பலர் படகின் பயணத்தில் கடலில் சங்கமமானதும், இன்னும் சிலர் இக்கரைக்கும் அக்கரைக்கும் இடையில் தலைமன்னார் இராமேஸ்வரம் கடல் பிராந்திய பகுதிக்கிடையில் காணப்படும் தடைகள் என அழைக்கப்படும் மண் திட்டிகளில் இறக்கி விட்டு படகோட்டிகள் தப்பிச் சென்றதும் கடந்த சில நாட்களுக்கு முன் நடந்த சம்பவங்கள்.

இப்படியான ஒரு சம்பவம் தலைமன்னார் பகுதியில் இடம் பெற்றுள்ளது. இலுப்பைக் கடவையிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாக சென்றவன்னிப்பகுதி அகதிகள் தலைமன்னார் பியர் பகுதி ஒரு மீனவனால் காப்பாற்றப்பட்டு பின் தலைமன்னார் கடற்படையினரிடம் சரண் அடைந்த இவ் அகதிகள் தெரிவித்ததாவது :

யாழ். பகுதியைச் சேர்ந்த நாங்கள் ''ரிவிரெச'' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்து வன்னிப் பகுதிக்கு நகர்ந்தோம். இப்போது அப்பகுதியிலும் தாக்குதல்களும், ஷெல் வீச்சுகளும் இடம் பெறுவதால் இதனால் அதிகமான உயிர்ச் சேதங்கள் பொதுமக்களுக்கு அங்கு ஏற்படுகின்றது. அத்துடன் பஞ்சம், பசி, பிணி நோய்களும் தொடர்கதையாக தொடர்கின்றன. இந்த அச்சம் காரணமாக இதிலிருந்து தப்பித்துக்கொள்ள மன்னார் இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்குள்ளும் சென்று யாழ். பகுதிக்கு செல்ல முடியாத நிலை. அப்படிச் சென்றாலும் அங்கும் எங்கள் பகுதியில் குடியிருக்க முடியாத நிலை. ஆகவே இதற்கெல்லாம் ஒரே வழி இந்தியாவுக்கு அகதிகளாக செல்வதே என நினைத்தோம்.

**இராமேஸ்வரக் கடற்கரை என்று கூறி தலைமன்னார் குருசுப்பாடுவில் இறக்கிவிட்ட அகதிகளிடம் 'இந்தியாவுக்கு வந்து சேர்ந்து விட்டோம்' என்று கடிதமும் வாங்கிச் சென்றுள்ளனர் படகோட்டிகள்.**

ஆகவே வன்னிப்பகுதியிலிருந்து இலுப்பைக்கடவைக்கு வந்த நாங்கள் இலங்கை இழுவைப்படகு ஒன்றில் இந்தியாவுக்குப் புறப்பட்டோம். எங்களிடம் இருந்த எஞ்சிய உடைமைகளை விற்றவர்களாக நபர் ஒருவருக்கு தலா 13000/ வீதம் செலுத்தியே எமது பயணத்தை தொடர்ந்தோம்.

ஐந்து மணித்தியாலங்கள் கடல் பயணத்தை மேற்கொண்ட படகோட்டிகள் மின்சார வெளிச்சம் தெரிந்த ஒரு கடற்கரைப் பகுதியை அண்டி சற்று தூரத்தில் இறக்கிவிட்டு அதோ தூரத்தில் தெரியும் வெளிச்சம்தான் இராமேஸ்வரம். ஆகவே நீங்கள் இந்த கரையில் இறங்கி நேரே நடந்து செல்லுங்கள் என பணித்துவிட்டு, அதில் பிரயாணம் செய்தவர்களிடம் தாங்கள் இந்தியாவுக்கு வந்து சேர்ந்துவிட்டோம் என்ற கருத்தில் அவர்களின் கைப்பட கடிதங்களும் அப்படகோட்டிகள் வாங்கி சென்றுவிட்டனர்.

ஏன் இந்தக் கடிதம் பெறப்பட்டது என்ற உண்மை என்னவென்றால் படகோட்டிகள் இந்த கடல் பிரயாணிகளை குறிப்பிட்ட இடத்தில் இறக்கிவிட்டு வந்தால்தான் படகோட்டிகளுக்கான முழுக் கூலியும் வழங்கப்படுமாம். அதற்காகவேதான் இந்த படகோட்டிகள் பிரயாணம் செய்தவர்களிடம் விபரத்தை பெற்றுச் சென்றதாக அகதிகள் தெரிவித்தனர்.

பின் கரையை அடைந்த இந்த 46 அகதி மக்களும் இருள் பகுதியிலிருந்து வெளிச்சம் தெரிந்த பகுதியைநோக்கி மூட்டை முடிச்சுடன் புறப்பட்டுக் கொண்டிருக்கும் போது நாய் குரைப்பைச் கேட்டு கடற்கரையோரத்தில் வாடியில் உறங்கிக் கொண்டிருந்த ஒரு மீனவன் வெளியில் எட்டிப் பார்த்தாராம். இருளில் ஒரு கும்பல் இது எப்படையோ என்ற அச்சமாம். இருந்தும் அகதிகளில் ஒருவர் அந்த மீனவனின் வாடியை நெருங்கி உரையாடிய பின்பே வந்தவர்கள் யார் என்பது அம்மீனவனுக்கு தெரிய வந்தது.

வந்திறங்கிய அகதிகள் தாங்கள் வந்த பிரயாணக் கதைகளைச் சொல்லிக் காட்டி இப்போது இராமேஸ்வரம் வந்துள்ளதாகவும், அதோ தெரியும் வெளிச்சப் பகுதிக்குப் போகிறோம் எனத் தெரிவிக்கவே உடனே அந்த மீனவன் சொன்னாராம். ''ஐயோ இந்த நேரம் நீங்கள் அங்கு சென்றுவிடாதீர்கள். ஏனென்றால் நீங்கள் இப்பொழுது நிற்கும் இடம் இராமேஸ்வரம் அல்ல தலைமன்னார் குருசுப்பாடு. அதோ தெரிவது அது கடற்படை முகாம்'' என்று சொல்லவே அகதிகள் அசந்து விட்டனராம். உண்மையில் இந்த மீனவனை இரவு 11 மணிக்கு சந்திக்காதிருந்தால் கடற்படை முகாமை நோக்கி புறப்பட்டிருப்போம், எங்களை கண்டு முகாமிலிருந்து 'சன்னங்கள்' புறப்பட்டிருக்கும் ஏதோ உயிர் தப்பினோம் என்றனர்.

பின் இவர்கள் விடிந்ததும் கடற்படையினரிடம் சரண் அடைந்தனர். அவர்களும் தலைமன்னார் பியர் மக்களும் தங்களை நன்கு உபசரித்ததாக இவ் அகதிகள் தெரிவித்தனர். படகோட்டிகள் பெருந்தொகையான பணத்தை கறந்தது மட்டுமல்ல நடுவழியில் எங்களை பரிதவிக்க விட்டு, எங்கள் உயிரையும் அநியாயமாகக் கொடுக்க வழிகாட்டி விட்டுச் சென்றனர் என இவர்கள் தெரிவித்தனர்.

இச்சம்பவம் இன்று நேற்று மட்டுமல்ல. இப்படிப் பல தடவைகள் அகதிகளுக்கு இவை நடந்து வந்துள்ளன. இச்சம்பவங்கள் அன்றும் இன்றும் ஆராயப்பட்டபோது தெரிய வருவதாவது அகதிகள் பலர் திசை தெரியாத பறவைகளாக அலைந்து திரிந்து அயல் நாடே தஞ்சம் என்று அவர்கள் புறப்படும்போது இவர்களைக் குளிர் காய்வதில் சில படகு சொந்தக்காரர்களும், படகோட்டிகளும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அகதிகளிடம் பெருந்தொகைப் பணத்தை கறந்து கொள்ளும் படகோட்டிகள் குறிப்பிட்ட இடத்துக்கு சென்றால் படகுக்கும், தங்களுக்கும் பிரச்சினை என்ற நினைப்பில் இப்படி நடுவழியில் பரிதவிக்க விட்டுச் செல்வது சர்வசாதாரணமாக மாறிவருவதுதான் இவ் அகதிகளுக்கு வேதனையை உண்டு பண்ணுகின்றதாம். அதுமட்டுமல்ல எமது மக்களாலேயே எமது வாழ்க்கையில் கரடுமுரடுகள் ஏற்படுகின்றது என மனம் குமுறுவதையும் கேட்கக்கூடியதாக இருந்தது.

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கடிச்சுக் கொண்டு கொஞ்ச நாள் போய்ப் படி ராசா. அதுக்குப் பின்னாலை நடக்கிறதைப் பற்றி யோசிப்பம்.

தீபன் : என்ன அவுஸ்திரேலியாவுக்கா? உங்களை விட்டிட்டா?

ராமு : ஏன் தீபன் அப்பிடிச் சொல்லிறாய்? கிடைக்க முடியாத கல்வி உன்ரை அறிவுக்கு நீ அங்கை படிச்சா நல்லாய் வந்திடுவாய் நாங்கள் நாடு நல்லா வந்தா அங்கை போயிடுவம். நீ படிச்சு முடிச்சிட்டு வந்து நாட்டுக்கு உழைக்க வேணும்.

லட்சுமி : கையுக்கை வைச்சு வளர்த்த பிள்ளை அது தான் யோசிக்கிறான். (இந்த மகிழ்ச்சியுடன் தீபாவின் வயசுக்கு வந்த மகிழ்ச்சியும் சேர்ந்து கொள்ள குடும்பம் இன்பத்தில் துள்ளுகின்றது. சித்தப்பா சுதன் வந்து தமையனாரைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் போது விஜியின் தாயாரும் வந்து அக்குடும்ப மகிழ்ச்சியில் கலந்து கொள்கிறார். லட்சுமி கூறிய நல்ல காலம் விஜிக்கும் வெகு தூரத்தில் இல்லை. இந்தத் தருணத்தில் ஒபரின் தையல் டீச்சர் வேலையும் லட்சுமிக்கு கிடைக்கின்றது.)

## விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் மறியல் போராட்டம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் விமான நிலைய விஸ்தரிப்பிற்காக சுவீகரிக்கப்பட்ட காணிகளின் உரிமையாளர்களில் நட்டஈடு கிடைக்காதோர் எதிர்வரும் 11-ஆம் திகதி மண்முனை வடக்கு பிரதேச செயலகம் முன்பாக உண்ணாவிரதப் போராட்டம், மறியல் போராட்டம் ஆகியவற்றினை நடத்தப்போவதாக அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக மட்டக்களப்பு விமான நிலைய விஸ்தரிப்பால் பாதிக்கப்பட்டோர் சங்கம் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றினையும் அனுப்பி வைத்துள்ளது.

அக்கடிதத்தில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

விமான நிலைய விஸ்தரிப்பிற்கான 1985-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அவசரகால சட்டத்தின்கீழ் 500 மீட்டர் சுற்றளவு காணி அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

இதனால் 870 பேரின் காணிகள் சுவீகரிப்பிற்குள்ளாகின. இவர்களுக்கு உரிய நட்டஈடு வழங்கப்படுமென அப்போது உறுதியளிக்கப்பட்டது.

இவர்களில் 60 பேருக்கு மட்டும் 9 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டது.

மிகுதியாக உள்ளவர்களில் 45 பேருக்கு நட்டஈடு வழங்குவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டு 16 மில்லியன் ரூபா தேவையான மண்முனை வடக்கு பிரதேச செயலகம் பாதுகாப்பு அமைச்சுக்கு அறிக்கை ஒன்றை சமர்ப்பித்தது.

இவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு பல வருடங்களாகியும் நட்டஈடு எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை. சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கேட்டபோது திறைசேரியில் பணம் இல்லையென தெரிவிக்கப்பட்டது.

காணிகளை இழந்தவர்கள் மற்றும் காணி வழங்கப்படாமலும் நட்டஈடிற்கான பணம் வழங்கப்படாமலும் பெரும். பாதிப்படைந்துள்ளனர். இதனால் இவர்கள் எதிர்வரும் 11-ஆம் திகதி உண்ணாவிரதப் போராட்டம், மறியல் போராட்டம் ஆகியவற்றில் ஈடுபடவுள்ளனர்.

## அடிப்படை வசதிகள் இன்றி முள்ளிக்குள அகதிகள் அவதி

மன்னார் மடுப்பகுதியில் முள்ளிக்குளத்தில் தங்கியுள்ள அகதிகள் அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் மருந்து வகைகள் இன்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் போது இடம் பெயர்ந்தவர்களில் 1617குடும்பங்களைச் சேர்ந்த 7562பேர் இங்கு தஞ்சமடைந்துள்ளனர்.

இது காட்டுப்பகுதியாகும். இங்குள்ள சிறு மரங்கள் பற்றைக்காடுகள் வெட்டப்பட்டு பெரு மரங்களின்கீழ் யூ.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் கூடாரங்கள் அமைத்து அதன் கீழ் வசித்து வருகின்றனர்.

போரூட் உட்பட பல தொண்டர் நிறுவனங்கள் மருந்து வகைகளை வழங்கிய போதும் அவை பற்றாக்குறையாக உள்ளன.

இதனால் மலேரியா, நெருப்புக்காய்ச்சல், கண்ணோய் என்பவற்றால் பலர் பீடிக்கப்பட்டுள்ளனர்.

குழந்தைகளுக்கான பாலுணவு, துணிவகைகள், சவர்க்காரம், குப்பிவிளக்குகள் என்பன இப்பகுதி மக்களுக்கு அத்தியாவசிய தேவையாக உள்ளன. குடிநீருக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

### யாழ். செல்ல மன்னாரில் 3500 பேர் காவல்

இதேவேளை மன்னாரில் இருந்து கப்பல் மூலம் யாழ்ப்பாணம் செல்வதற்கு 3500 பேர் மன்னாரில் பதிவு செய்து விட்டு காத்து இருக்கின்றனர்.

இவர்களில் யாழ். பல்கலைக்கழகத்தில் முதலாம் வருடம் கல்வி கற்கும் 39 மாணவர்களும் அடங்குவர்.

www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com




**யாரும் எத்தனை கேள்விகளையும் எழுதி அனுப்பலாம். பதில் அளிப்பதற்கான கேள்விகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை குயுக்தியாரைச் சார்ந்தது. ✻ இக்குறியிட்ட கேள்வி பரிசு பெறுகிறது. வாசகர்களே குயுக்தியாரிடம் பதில் பெற கேள்விகளைத் தாராளமாக அனுப்புங்கள்.**

மாதொருபாகன்-
காரைக்கால்

கேள்வி : இந்தியப் பிரதமர் குஜ்ரால் "இனிமேல் இலங்கை உள் விவகாரத்தில் இந்தியா தலையிடாது. ஒரு தடவை தலையிட்டுக் கையைச் சுட்டுக் கொண்டது போதும்" என்று கூறி விட்டாரே?

பதில் : "நன்றே செய்வாய் பிற செய்வாய் ! நானோ அதற்கி நாயகனே?" என்று அப்பரடிகள் தேவாரத்தில் பாடியபடி இந்தியாவின் மன மாற்றத்திற்காகக் காத்திருக்க வேண்டியதுதான்!

அ. எறிபத்தன்-கரூர்

✻கே : ஒரு வழியாக சந்தன வீரப்பன் பிரச்சினைக்கு தீர்வு கண்டதுபோல இலங்கை இனப்பிரச்சினைக்கும் கலைஞர் தீர்வு காண்பாரா?

ப : அதற்கு ஒரு நக்கீரன் உதவினார் இதற்கு ஒரு நக்கீரன் (பத்திரிகை ஆதரவு) வர வேண்டும்!

இரா-வேம்பு-தஞ்சை

"கே : இலங்கையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆண்டால் தமிழர்களுக்கு இந்தியாவின் ஆதரவு இருக்கும். ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி ஆண்டால் அது இருக்காது" என்று கொழும்பில்ருந்து வெளிவந்த போது 'சுதந்திரன்' ஏட்டில் குயுக்தியார் பதிலில் படித்த ஞாபகம். 'ஈழ சுதந்திரன்' அது பற்றி என்ன சொல்கிறது?

ப: சொல்வதென்ன? நடைமுறையில் காண்கிறோமே!

மா. அப்பு-புதுவை

கே : ராஜீவை அணுகியது போல ஈழத் தமிழர்கள் குஜ்ராலை அணுகாததே அவர் இலங்கைப் பிரச்சினையில் ஒதுங்கிநிற்கக் காரணமா?

ப : இல்லை; ராஜீவுக்கு நடந்ததுதான் காரணம்!

என். தேவநாதன்-
செந்தாரப்பட்டு

கே: பசியின்றி மனிதன் வாழ முடிந்தால்?

ப: சுவையே இருக்காது. ஏனெனில் துறவறத்தை வலியுறுத்தும் ஆன்மீகம் கூட 'பசித்திரு' என்றுதான் போதிக்கிறது.

மா.சி. திருமலை-
நாகர்கோயில்

கே: கடவுள் கொள்கையின் தாத்பர்யம் என்ன?

ப: கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர்.

பா. துரை-இராசபாளையம்

கே: 'எய்ட்ஸ்' நோய் இதற்கு முன்பு இருந்ததே இல்லையா? இப்போதுதான் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டதா?

ப: மனிதனுக்கு பிறப்புறுப்புகள் அமைந்ததிலிருந்து இது போன்ற நோய் இருந்துதான் வருகிறது. 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற உடலுறவு முறை தான் அதற்கு ஒரே மருந்து. பொதுவாக எதையும் இன்றையஉலகில் அமெரிக்காகாரன் சொன்னால்தான் எடுபடுகிறது. அவன் தாய்ப் பாலை நிறுத்துஎன்றுசொன்ன போது நமது கிராமத்து வைத்தியர் கூட ஏதாவது நோய் என்று குழந்தையை எடுத்துச் சென்றால் 'முதலில் தாய்ப் பாலை நிறுத்து' என்று தான் அறிவுரை வழங்கினார். இப்போது அமெரிக்காக் காரன் தாய்ப்பால் சிறந்த மருந்து என்று சொல்லி விட்டதும் அதையே அனைவரும் சொல்கின்றனர். ஆக 'எய்ட்ஸை' விடக் கொடியது இந்த அமெரிக்க விளம்பர மோகம் தான்.

M R. கனகசபை-
திருவண்ணாமலை

கே: நம் மக்கள் தாய் மண்ணில் உயிருக்கே போராடிக் கொண்டிருக்கும் போது உயிருக்குஆபத்து என்பதைச் சொல்லி வெளிநாடுகளில் புகலிடம் பெற்ற நம்மவர்கள், திருமணம்,காதுகுத்து போன்ற விழாக்களை வீடியோ ஆடியோவுடன் ஆடம்பர விருந்து வைத்து ஆகா ஓகோவென்று நடத்துவது சரியா?

ப: சரியில்லை தான். என்ன செய்வது! விழாமலிருக்க விழாவென்று விழாக்களிலேயே விழுந்து விடுவது நமது சம்பிரதாயமாகி விட்டது. இதை மாற்றியமைக்கவும் நம்மவரிடையே பெரிய இயக்கம் தேவை.

வெ. முத்து-கடலூர்

கே: கொழும்பில் தமிழர்களிடம் பொலிசார் பணம் பறிப்பதைக் கண்டு குமுறுகிறாராமே குடியரசுத் தலைவர் சந்திரிகா?

ப: பணம் பறிக்கின்ற நிலையைப் படைத்தவரே அவர் தானே! ஆடு நனைகிறதே என்று ஓநாய் அழுத கதை இது!

## சிங்கள-தமிழ் ஐக்கிய முன்னணி

"இலங்கையில் தமிழ் பேசும் மக்களுக்கும், சிங்கள மச்களுக்கும் இடையில் சமாதானத்தை உருவாக்கி இன வேற்றுமையால் பாதிக்கப் பட்டுள்ள மக்களுக்கு நிம்மதி ஏற்படுத்துவதற்கும் இலங்கையை முன்னேற்றப்பாதைக்குக் கொண்டு செல்வதற்குமாக சிங்கள, தமிழ் ஐக்கிய முன்னணியை உருவாக்கியுள்ளோம்."

இவ்வாறு புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஸ்ரீலங்கா தமிழ். சிங்கள ஐக்கிய முன்னணியின் அமைப்பாளரான மெதமகநுவரவைச் சேர்ந்த கதிர்வேல் முருகையா பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

# அம்பாறை மாவட்டத் தமிழர்களின் நிலங்கள் பறிபோகும் ஆபத்து!

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை அது இன்று தமிழ் பேசும் மக்களின் மாவட்டம் என்ற கதை பழங்கதையாகி விட்டது. அதுமட்டுமல்ல திருகோணமலை மாவட்டத்துக்கும் இதே கதிதான். அதுவும் சிங்கள மாவட்டமாக மாறி விட்டது.

1920களில் கிழக்கில் 4 சதவீதமாகவிருந்த சிங்களவர்கள் 1981இல் எடுக்கப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி 24 சதவீதமாக அதிகரித்துள்ளனர்.

1920களில் அம்பாறை மாவட்டத்தில் 10 சதவீதமாகவிருந்த சிங்களவர்கள் 1981இல் 33வீதமாயினர்.

அம்பாறை மாவட்டத்தின் மொத்தப்பரப்பு 4414 9 சதுர கிலோ மீற்றர். இதில் நீர்ப்பரப்பு தவிர்த்த நிலப்பரப்பு 4292.2 சதுரகிலோ மீற்றர்.

தமிழ்பேசும் மக்கள் வாழும் பிரதேசங்களின் மொத்தப் பரப்பு 927.1 சதுர கி.மீற்றர், தனிச் சிங்களப் பிரதேசங்களின் பரப்பு 3355.1 சதுர.கி.மீற்றர்.

அதாவது 62.08 வீதம் தமிழ் பேசும் மக்களுக்கு 927.1 ச.கி.மீற்றர் நிலந்பரப்பு; 37.64 வீதமுள்ள சிங்கள மக்களுக்கு 3355.1 ச.கி.மீற்றர் நிலப்பரப்பு.

அப்படிப் பார்த்தால் 62.08 வீதமுள்ள தமிழ் பேசும் மக்களுக்கு 30 வீத நிலப்பரப்பும்; 37.64 வீதமுள்ள சிங்கள பெரும்பான்மை இன மக்களுக்கு 70 வீத நிலப்பரப்பு உள்ளது என்பதும் தெளிவாகிறது.

அம்பாறை மாவட்டத்தில் 37 வீதமான சிங்கள மக்கள் 70 சதவீதமான நிலப்பரப்புகளை தங்கள் வசம் வைத்திருப்பது பற்றி தமிழர்களும், முஸ்லிம்களும் சிந்திக்காமல் இல்லை.

இச்செய்தி தமிழ் பேசும் சிறுபான்மை சமூகத்தை எட்டியிருப்பின் தங்களுக்குள் அவர்கள் மோதிக்கொள்ள மாட்டார்கள்.

1971 அக்டோபர் 9ஆம் திகதிய சனத்தொகைக் கணிப்பின்படி அம்பாறை மாவட்டத்தில் 2,72,605 பேர் வாழ்ந்து வந்துள்ளனர்.

இவர்களுள் சிங்களவர்கள் 82,280 பேர் 30.1%, முஸ்லிம்கள் 1,27,308 பேர்-46.8% தமிழர்கள் 62.290 பேர். 22.8% பறங்கியர் 321 பேர்-02%, மலாயர் 90 பேர் 0 1%.

இதன் பின் 1981இல் எடுக்கப்பட்ட சனத் தொகை கணக்கெடுப்பின்படி 3 இலட்சத்து 88 ஆயிரத்து 786 பேர் அம்பாறை மாவட்டத்தில் இருந்துள்ளனர்.

இவர்களில் சிங்களவர்கள் 1,46,371பேர். 37,64 சதம். முஸ்லிம்கள் 1,61,661பேர். 41,58 சதம். தமிழர்கள்79,725 பேர் 20.4 சதம். ஏனையோர் 1030 பேர்.

1971 இன்படி முஸ்லிம்கள் 46.8 சதமும், சிங்களவர் 30.1 சதமும், தமிழர் 22.8 சதமும் இருந்தனர். 1981இன் படி முஸ்லிம்கள் 41.48 சதமும், சிங்களவர் 37.64 சதமும், தமிழர் 20.5 சதமும் ஆகிறது. அதாவது சிங்கள சனத்தொகை வீதம் 7.54 சதம் ஆல் அதிகரிக்கும் அதே வேளை முஸ்லிம்கள் சனத்தொகை வீதம் 4.22 சதம் ஆல் குறைய தமிழர்கள் வீதம் 2.3 சதம் ஆல் குறையலாயிற்று.

இதற்குக் காரணங்கள் என்ன?

அவ்வப்போது ஆட்சிக்கு வந்த பேரினவாத அரசுகளின் கைவரிசைகள் தான். எனினும் இரு விடயங்களை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

1. அம்பாறை மாவட்டத்தில் ஏற்படுத்தப்பட்ட வெளியார் குடியேற்றம்.

2. மகா ஓயா பதியத்தலாவ தெகியத்தகண்டிய போன்ற பிரதேசங்களை அம்பாறை மாவட்டத்துடன் இணைத்தமை.

இவைகளே இன்று அம்பாறை மாவட்டம் சிங்கள மயமாக்கப்பட்டதற்கான காரணங்கள். பேரினவாத அரசு கண்டி காலி, மாத்தறை போன்ற பிரதேசங்களிலிருந்து பெரும்பான்மை இனத்தவர்களை அவ்வப்போது குடியேற்றி வந்தது.

மகாவலி 'சி' பிரிவு இதன் ஒரு அங்கம் இப்படியாக பெரும்பான்மை இனம் குடியேற்றப்பட்டதும் மாவட்டத்தின் சிறுபான்மை இனவிகிதாசாரம் குறைவடைந்தது மட்டுமல்லாமல் நிலபுலன்களும் அபகரிக்கப்பட்டன.

இதற்கு ஒருபடி மேலாக 1994 நவம்பரில் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீட்டு அறிக்கையின்படி அம்பாறை மாவட்ட மொத்த சனத்தொகை 6 இலட்சத்து 10 ஆயிரத்து 309 ஆகும்.

சிங்களவர்கள் 2,63,653 பேர். முஸ்லிம்கள் 2.33 48 பேர், தமிழர்கள் 1,11,686 பேர். ஏனையோர் 1221 பேர்.

இதன்படி 1981 கணக்கெடுப்புடன் ஒப்பிடுகையில் சிங்களவர்கள் 1 இலட்சத்து 17 ஆயிரத்து 282 பேராலும், முஸ்லிம்கள் 72 ஆயிரத்து 87 பேராலும், தமிழர்கள் 31 ஆயிரத்து 961 பேராலும் அதிகரித்துள்ளனர்.

அதாவது 1994இன் கணக்கெடுப்பு ஒரு பாரிய உண்மையை வெளிப்படுத்துகிறது. மாவட்ட பெரும்பான்மையாக சிங்களவர்களை இனங்காட்டியதுதான் அது.

தற்போது அம்பாறை மாவட்டம் சிங்கள பேரினவாதத்தின் கீழ் தான் உள்ளது.

இது ஒரு புறமிருக்க தமிழர்களின் நிலபுலன்கள் திட்டமிட்டு கட்டங்கட்டமாக அபகரிக்கப்பட்டு வருகின்றன.

அண்மைக்கால தரவுகளின்படி பாரம்பரியமாக தமிழர் வாழ்ந்துவந்த பல பிரதேசங்கள் இன்று முஸ்லிம்களால் காவுகொள்ளப்பட்டு உடைமையாக்கப்பட்டுள்ளது. இன்றும் அந்த நிகழ்வு திரைமறைவில் நடைபெற்று வருவதாக அரசியல்கள் குறிப்பிடுகின்றனர்.

பெரிய நீலாவணை, பாண்டிருப்பு, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், திராய்க்கேணி, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற தமிழ் பிரதேசங்களின் எல்லைகள் படிப்படியாக ஆக்கிரமிப்புக்குள்ளாகி வந்ததைக் குறிப்பிடலாம்.

தனித்தமிழ்ப் பிரதேசமாக்விருந்த மீனோடைக் கட்டு இன்று தனி முஸ்லிம் பிரதேசமாக மாறியதையும் குறிப்பிடலாம்.

திராய்க்கேணிமக்களுக்கும் எச்சரிக்கை விடப்பட்டதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நிலைமை நீடிப்பின் மாவட்டம் முழுவதுமே பேரினவாதத்திற்கு ஆளாகும் நிலை தோன்றலாம்.

'சமாதானம், ஐக்கியம், ஒற்றுமை, சகோதரத்துவம்" பற்றிப் பேசுவோர் இவ் ஆக்கிரமிப்பு அச்சுறுத்தல் போன்ற விடயங்களிலும் கவனமெடுத்தால் எதிர்காலம் நன்மை தருவதாக அமையும் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

எமது மண்ணையும், வளங்களையும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து யார், எப்போது மீட்பது?

படிப்பகம்

## ஒருகுறளை உணர்வோம்

### அறிவும் திருவும் வேறு வேறா?

**- அருகோ -**

''இருவே றுலகத் தியற்கை திருவேறு
தெள்ளிய ராதலும் வேறு''

திருக்குறள் : 347

பரிமேலழகர் : உலகத்து இருவேறு-உலகத்து ஊழினானாகிய இயற்கை இரண்டு கூறு; திரு வேறு தெள்ளியர் ஆதலும் வேறு-ஆதலால் செல்வமுடையராதலும் வேறு அறிவுடையராதலும் வேறு.

செல்வத்தினைப் படைத்தலும் காத்தலும் பயன்கோடலும் அறிவுடையார்க்கல்லது இயலாவன்றே; அவ்வாறன்றி அறிவுடையார் வறியராகவும், ஏனையோர் செல்வராகவும் காண்டலான், அறிவுடையராதற்காகும் ஊழ் செல்வமுடையராதற்கு ஆசாது; ஆகவே செல்வம் செய்யுங்கால் அறிவாகிய துணைக்காரணமும் வேண்டா என்பது பெற்றாம்.

மணக்குடவர் : செல்வமுடையராதலும், தெள்ளியராதலும் வேறு வேறு ஊழினால் வரும்; ஆதலால் இரண்டுவகையராதல் உலகத்தியல்பு.

பரிதியார் : இரண்டு வகைப்படும் செல்வம்; எப்படியென்றால், எட்டு வகையான செல்வமும் கல்வியும் என்றவாறு.

காளிங்கர் : இரண்டு கூறுபட்டிருக்கும் உலகத்தார் ஊழாம் இயற்கை; எங்ஙனம் எனில் செல்வம் உண்டாதலும் ஒரு நல்லூழின் கூறு; கல்வியால் தெளிந்த நல்லறிவு உடையராகலும் மற்றொரு நல்விதிக்கு அமைந்த கூறு; எனவே முன்னமே இல்லறத்தாராகலும் பின்னும் துறவறமியற்றியவழித் தெளிந்த நல்லறிவுடைய ஞானத்தாராகலும் என இங்ஙனம் இரண்டு கூறுபடும் என்றவாறு

டாக்டர் மு.வ. : உலகத்தின் இயற்கை, ஊழின் காரணமாக இருவேறு வகைப்படும்; செல்வம் உடையராதலும் வேறு, அறிவுடையராதலும் வேறு.

இருவேறு உலகத்தின் இயற்கை என்பதை ஊழின் மேல் ஏற்றிப் பொருள் காண்பதால், அறிவுடையராதலும் செல்வமுடையராதலும் வேறு வேறு என்று வலிந்து கூற வேண்டிய நிலை உரையாசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில் செல்வமுடையவரெல்லாம் அறிவுடையராக இருப்பதில்லை என்றோ, அறிவுடையவர்களெல்லாம் வறுமையில்தான் வாடுகிறார்கள் என்றோ சொல்வதற்கில்லை

பரிமேலழகரே கூறுவதுபோல செல்வத்தைப்படைத்துக் காத்துப் பயன்பெறுவதற்கே அறிவு தேவை. அதைப் போலவே அறிவுடையோருக்குச் செல்வத்தைத் தேடிக் கொள்வதும் முடியாததன்று.

உள்ளபடி அறிவும்கூட ஒரு செல்வமேயாகும். ஏனெனில் வறியோரெல்லாம் அறிவுடையவர்களாகவும் இருந்து விடுவதில்லை.

அப்படியென்றால், வள்ளுவர் கூறுகின்ற இருவேறு உலகத்து இயற்கை செல்வமும் அறிவும் இல்லையா? எனக் கேட்கலாம்.

இல்லைதான்; ஏனெனில் ''திரு வேறு தெள்ளியராதல் வேறு'' என்று திருவள்ளுவர் மிகத் தெளிவாகவே குறிப்பிட்டுள்ளார்.

'திரு' என்பதற்கு செல்வம், நல்வினை, அழகு, இளமை, கண்டாரால் விரும்பப்படும் தன்மை, கடவுள் தன்மை என்றெல்லாம் பலபொருள்கள் உண்டு. அத்துடன் இயல்பாகவே அறிவு ஆற்றல்கள் வாய்ந்தோரைக் 'கருவில் திருவுடையோர்' என்று கூறும் வழக்கமும் இருக்கிறது. அதைப்போலவே 'தெள்ளுதல்' என்றால் தெளிவாதல், ஆராய்தல், முயன்று தேடுதல் என்றெல்லாம் பல பொருள்கள் உள்ளன.

எனவே, 'திரு வேறு தெள்ளியராதல் வேறு,' என்பதை இயல்பாகவே அறிவும் ஆற்றலும் கொண்டோர்; முயன்று அவற்றைப் பெற்றோர் என இருவேறு இயற்கை எனக் கொள்ளலாம்.

தலைவர் மகன் தலைவராதலையும், தொண்டனாக இருந்து தன் சிந்தனை, செயல், திறமைகளால் தலைவர் தகுதிக்கு உயர்வோரையும் கண்கூடாகக் காண்கிறோமே! அதைப்போலவே இயற்கையாகவே செழிப்பான பகுதியும், மனிதனால் முயன்று செழிப்பாக்கப்பட்ட பகுதியும் இம் மண்ணில் கண்கூடாகக் காணக்கூடியதாகத்தானே உள்ளது!

ஆகவே இரு வேறு உலகத்து இயற்கை என்பது இயல்பாகவே கிடைத்த ஆற்றல் என்பது ஒன்று; முயன்று பெருக்கிக் கொண்ட ஆற்றல் என்பது மற்றொன்று இவ்விரண்டுமே இயற்கையில் முடியாததென்பதாக ஒன்றில்லை'' என்று அறிவுறுத்துவதே இக்குறட்பாவின் திரண்ட பொருளாகும்.

## பேச்சுக்களில் அரசு-புலிகளுக்கு இணைப்பாளராக இருக்கத் தயார்

### -ஐ. சி. ஆர். சி. பிரதிநிதி உறுதிமொழி

''அரசும் புலிகளும் புரிந்துணர்வு அடிப்படையில் சமாதானப் பேச்சுவார்த்தை ஒன்றுக்கு அடித்தளம் இட்டால்-பேச்சுவார்த்தை சுமுகமாகச் சென்று சேர-செய்திகளைப் பரிமாறும் இணைப்பாளராக இருப்பதற்கு நாம் என்றுமே தயார். யாழ்ப்பாணத்தில் இரு தரப்பினரும் பேச்சுவார்த்தைக்கு வர விரும்பியபோது கடிதப் போக்குவரத்து பரிமாறும் ஊடகமாக நாம் இருந்துள்ளோம். இதனை இந்நாட்டு மக்கள் மறந்துவிடவில்லை. மீண்டும் இது போன்ற நிலைமை உருவானால் நாம் நமது பங்களிப்பைச் செய்வோம்'' என்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி. விக்டோரியா ஹெமுனா மட்டக்களப்பில் வைத்துத் தெரிவித்தார்.

#### செல்வி விக்டோரியா ஹெமுனா

சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் சம்பந்தமான விளக்கவுரையொன்றை வழங்கும் கருத்தரங்கொன்றை மட்டக்களப்பு மாநகர முதல்வர் செழியன் ஜே. பேரின்பநாயகம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் ஏற்பாடு செய்திருந்தார்.

மட்டக்களப்பு மாநகர சபையின் சபா மண்டபத்தில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மாநகர சபையின் அலுவலக உத்தியோகஸ்தர்கள் கலந்து கொண்டனர் மாநகர பதில் ஆணையாளர் பொ.கணபதிப்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பிரதிநிதி செல்வி விக்டோரியா ஹெமுனா தொடர்ந்து பேசுகையில்,

#### கைதிகளின் நலன்கள்

மனிதாபிமான சட்டங்கள் மீறப்படும்போது செஞ்சிலுவைச் சங்கம் ஏன் அது பற்றி உலகத்துக்கு தெரிவிக்காமல் மௌனமாக இருக்கிறது எனச் சிலர் கேட்பதுண்டு. எமது பிரதான பணிகளில் ஒன்று கைதிகளைப் பார்வையிட்டு அவர்களின் நலன்களைக் கவனிப்பதாகும். இப்பணியை நாம் மட்டுமே செய்து வருகிறோம்.

பெற்றோர், உறவினர் சென்று பார்க்க முடியாத கைதிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் சந்தித்து கைதிகளின் நலன்களைக் கவனிப்பதுடன், அவர்களுக்கும் குடும்பங்களுக்கும் இடையில் குடும்ப செய்திகளைப் பரிமாறவும் உதவி செய்கிறது. பகிரங்கமாக குற்றஞ்சாட்டி அறிக்கை விடுவது போன்ற செயல்களால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தனது வழமையான பணிகளைச் செய்வதற்கு ஏதும் குந்தகம் விளையக்கூடும். இதற்காக நாம் மௌனமாக இருப்பதாகக் கருதக்கூடாது. இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் உள்ள ஒருவர் கடும் சுகயீனமுற்றிருந்தால் அவர் விரும்பும் பட்சத்தில் அவரை நகர மருத்துவமனைக்கு கொண்டு வந்து சேர்க்கிறது என்றார்.

#### பேரின்பநாயகம்

மாநகர முதல்வர் செழியன் ஜே. பேரின்பநாயகம் தலைமை வகித்துப் பேசுகையில், போர்ப் பிராந்தியத்தின் அனர்த்த அழுத்தங்களை நிதமும் அனுபவிக்கிறோம். நாம் எதிர்கொள்ளும் பாடுகள் தாக்கங்கள், இழப்புகள் எல்லாமே அளவிட முடியாததொன்று. வடக்கு- கிழக்கு மாகாணங்களில் வதியும் நம்மத்தியில் அகதிகளைப் பெருமளவில் பார்க்கிறோம். அனர்த்த விளைவினால் தாக்குண்ட குடும்பங்களின் கண்ணீரை எம்மால் துடைக்க முடியவில்லை. அனுதாபம், அஞ்சலி இத்தகைய தாய் எமது சீவியம் செல்லுகிறது. பல ஆண்டுகளாக வளர்ந்து வந்துள்ள இப்பிரச்சினைக்கு முடிவு அவசரமாகத் தேவை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை எமது பிரதேசத்தில் மிகமிக அத்தியாவசியமானது என்றார்.

## இலங்கைக்கு அகதிகள் திரும்பினால் உயிருக்கு ஆபத்தே!

### சிங்களப் பிரமுகர் தகவல்

தமிழ்மக்கள் (வெளிநாடுகளில் வாழ்வோர்) தாயகம் திரும்பிப்போவது சாத்தியமா? என்று சுவிஸ் ஜெனிவா நகரில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கேட்கப்பட்ட கேள்விக்கு, சிறீலங்கா தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் அஜித்ருபசிங்க பதில் அளிக்கையில்,

அவர்களுக்கு அங்கே எந்தவிதப் பாதுகாப்புமற்ற சூழ்நிலையே தொடர்கிறது. அவர்கள் அங்கு உயிருக்கு ஆபத்தின்றி வாழ்வது சாத்தியமில்லை என்று கூறினார். இம்மாநாடு 11-8-97ல் நடைபெற்றது.

## குருநாகல் வேலை நிறுத்தம் தொடர்கிறது

குருநாகல் மாவட்டத்தில் உள்ள மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்து டிப்போக்களான குருநாகல் வடக்கு, குருநாகல் தெற்கு, மாகோ, கல்கமுவ, நிக்கவெரட்டிய, கிரியுல்ல, குளியாப்பிட்டி ஊழியர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்து உள்ளனர். இதனால் போக்குவரத்து வெகுவாகப் பாதிக்கப்பட்டு உள்ளது. குருநாகல் நகருக்கு வரும்வடபகுதிமக்கள் பல சிரமங்களுக்கு மத்தியில் கண்டி செல்கின்றனர்.

Edited Printed and Published by ARUNACHALAM GOPALAN No. 14, Sait Colony 1st Street, 3rd Floor, Egmore, Chennai-600 008
Printed at Kuralneri Achagam, Chennai-94

சனநாயகம்-சமதர்மம்-சமயசார்பின்மை-நமது பாதை.